17th
March
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 23 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com



# கட்சிகள் விரும்பும் பட்சத்தில் முதலில் பொதுத் தேர்தல்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு தேர்தலையும் நடாத்துவதற்கு தயாராக இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பொதுத் தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென கட்சிகள் விரும்பினால் பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றினை கொண்டு வந்து பெரும்பான்மையுடன் நிறைவேற்றும் பட்சத்தில் முன் கூட்டியே பொதுத் தேர்தலை நடத்த முடியுமென ஜனாதிபதி ரணில்

03ம் பக்கம்பார்க்க...

# டுபாய் ஸைதா பவுண்டேஷனினால் 110 பாடசாலைகளுக்கு நிதியுதவி

## தெரிவிக்கிறார் ஏ.எச்.எம். பௌஸி எம்.பி



டுபாய் சயீதா பவுண்டேஷன் நாட்டின் 110 பாடசாலைகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு

03ம் பக்கம்பார்க்க...

# பாகிஸ்தான் தற்கொலைத் தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட எழுவர் பலி



பாகிஸ்தான் வஜிரிஸ்தான் மாகாணத்திலுள்ள சோதனைச் சாவடியொன்றில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் இரண்டு இராணுவ அதிகாரிகள் உட்பட ஏழு பேர்

03ம் பக்கம்பார்க்க...

# ஐ.ம. சக்திக்கு வெற்றி வாய்ப்பு

## சர்வதேச கருத்துக் கணிப்பில் தகவல்



சர்வதேச பிரசித்தி பெற்ற நிறுவனமொன்று நடாத்திய கருத்துக் கணிப்பில் சஜித்

02ம் பக்கம்பார்க்க...

# கொள்ளுப்பிட்டிக்கு இடம் மாறிய சவூதி தூதரகம்

கடந்த பல வருடங்களாக கொழும்பு 07 ஹோட்டன் பிளேஷில் இயங்கி வந்த சவுதி அரேபிய தூதுவராலயம் தற்போது காலி

02ம் பக்கம்பார்க்க...

# ஏழு கட்டங்களாக இந்திய பொதுத் தேர்தல்



இந்தியாவில் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற மக்களவைப் பொதுத்தேர்தல் திகதி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாகவே நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகள் சார்பில் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காகப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிர ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

02ம் பக்கம்பார்க்க...

# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐ.மக்கள் சக்தி முன்னணியில்

## - ஆளும்கட்சி எம்.பி எஸ்.பி யின் கணிப்பு -



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 40 சத வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறுமென ஆளும் கட்சி உறுப்பினர் எஸ்.பீ. திஸ ாநாயக்க எதிர்வு கூறியுள்ளார். ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த அவர்

02ம் பக்கம்பார்க்க...

# புதிய போர் நிறுத்தத்துக்கு ஹமாஸ் முஸ்தீபு

## எகிப்து, கட்டார் மத்தியஸ்தர்களிடம் முன்மொழிவு சமர்ப்பிப்பு



இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் கைதிகளை விடுவிப்பதற்கான புதிய போர்நிறுத்த முன்மொழிவை எகிப்து மற்றும் கத்தாரில் உள்ள மத்தியஸ்தர்களிடம்

02ம் பக்கம்பார்க்க...

# இஸட் மதிப்பெண்களின் அடிப்படையில் தே.க. கல்லூரிகளுக்கு மாணவர் அனுமதி

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் குறைந்தபட்ச இசட் மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே இனிமேல் மாணவர்கள் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு

02ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## ஏழு...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இந்திய தேர்தல் ஆணையர்களாக ஞானேஷ்குமார், சுக்பீர் சந்து ஆகியோர் நேற்று முன்தினம் பதவி ஏற்றுக் கொண்டனர்.

அதே நேரம் இந்தியா முழுவதும் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் செய்து முடித்துள்ளது.

தயார் நிலையில் மின்னணு வாக்கு இயந்திரங்கள் உள்ளன. தொடர்ந்து தேர்தல் திகதி பற்றி முடிவெடுப்பதற்கான தேர்தல் ஆணையர்கள் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில், கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி இன்று (16) பிற்பகல் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அதன்படி இதற்கான செய்தியாளர் சந்திப்பு டெல்லியில் உள்ள இந்தியத் தேர்தல் ஆணைய அலுவலகத்தில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட அறிவிப்பில், 7 கட்டங்களாக 2024 மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ளது. அதில் முதல் கட்டத்திலேயே தமிழகத்தில் தேர்தல் நடைபெறவுள்ளது.

“மார்ச் 20 ஆம் திகதி வேட்புமனு தாக்கல், மார்ச் 27 வேட்புமனு தாக்கல் செய்ய இறுதி நாள், மார்ச் 28 வேட்புமனு மறுபரிசீலனை, மார்ச் 30 வேட்புமனு திரும்பப்பெற கடைசி நாள், தமிழகத்தில் ஏப்ரல் 19 ஆம் திகதி மக்களவைத் தேர்தல் நடைபெறுகிறது. ஜூன் 4 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை என விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் விளவங்கோட்டுக்கான இடைத்தேர்தலும் ஏப்ரல் 19 ஆம் திகதி நடைபெறும்“ என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக நடைபெறும் தேர்தலில், தமிழகம், புதுச்சேரி உள்பட மொத்தம் 102 தொகுதிகளுக்கு ஏப்ரல் 19 ஆம் திகதி அன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

அதேபோல், கேரளா, கர்நாடகா உள்பட 89 தொகுதிகளுக்கு ஏப்ரல் 26 ஆம் திகதி இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

குஜராத், சண்டிகர் உள்பட 94 தொகுதிகளுக்கு மே 7 ஆம் திகதி மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதனையடுத்து, நான்காம் கட்ட வாக்குப் பதிவானது, மே 13 ஆம் திகதி அன்று ஆந்திரப் பிரதேசம், பீகார், தெலுங்கானா உள்பட 96 தொகுதிகளுக்கு நடைபெறகிறது.

ஐந்தாம் கட்ட தேர்தலில், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், ஜம்மு - காஷ்மீர் உள்பட 49 தொகுதிகளுக்கு மே 20 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

உத்தரப் பிரதேசம், டெல்லி, ஹரியானா உள்பட 57 தொகுதிகளுக்கு ஆறாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பஞ்சாப், ஹிமாச்சலப்பிரதேசம் உள்பட மீதமுள்ள 57 தொகுதிகளுக்கு ஏழாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

ஏழு கட்டமாக நடைபெறும் இந்த மக்களவைத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4 ஆம் திகதி எண்ணப்படுகிறது.

## இஸெட்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்படுவார்கள்.

பத்தொன்பது தேசியக் கல்விக் கல்லூரிகள் இணைக்கப்பட்டு, தேசிய ஆசிரியர் பல்கலைக்கழகம் என்ற புதிய பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சட்ட நடவடிக்கைகள் தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளன. புதிய பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் தேசிய கல்வியியல் கல்லூரிகளின் மூன்று வருடப் பயிற்சிக் காலம் நான்கு வருடங்களாக விரிவுபடுத்தப்படும்.

அதன்படி இதுவரை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தேசிய கல்வி டிப்ளோமாவுக்குப் பதிலாக இளங்கலை பட்டமே மாணவர்களுக்கு வழங்கப்படும்.

எனவே, நான்கு வருட ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்த பட்டதாரிகளுக்கு மாத்திரமே இனி பாடசாலைகளுக்கான நியமனம் வழங்கப்படவுள்ளது.

கடந்த டிசம்பரில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே இங்கு முதல் குழுவாக உள்ளனர். இந்த மாணவர்களின் முடிவுகள் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் வெளியிடப்படும். புதிய முறையின் கீழ், தேசிய பல்கலைக்கழகத்தில் சேரும் மாணவர்களும் தேசிய ஆசிரியர் பல்கலைக்கழகத்தில் சேரும் அதேநேரத்தில் விண்ணப்பிக்க வேண்டும். பல்கலைக்கழக மானியக் குழுவினால் வெளியிடப்பட்ட சேர்க்கை கையேட்டின் படி அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன், இந்தத் தேசிய ஆசிரியர் பல்கலைக்கழகம் அமைக்கப்பட இருந்த நிலையில், தேசியக் கல்வி நிறுவனத்தின் கீழ் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையால், பணி நீண்ட நாட்களாக தாமதமானது. இதற்கு கல்லூரி விரிவுரையாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததோடு, சில சமயங்களில் வேலைநிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அவிபிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடயோர் 071 89 666 13 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்

## எதிர்வரும்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி முன்னணியில் இருப்பதை ஒப்புக் கொண்டதுடன் ஆளும் மொட்டுக் கட்சி 30 வீத வாக்குகளையே பெறுமென்றும் தெரிவித்தார்.

ஜே வி பி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி 15 வீத வாக்குகளையும் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஏனைய கட்சிகள் வெறும் 5 வீதமான வாக்குகளை மாத்திரமே பெறுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி முன்னணியில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதி தவிர்ந்த நாட்டின் ஏனைய மாகாணங்களை உள்ளடக்கிய இந்த ஆய்வின் படி ஐக்கிய மக்கள் சக்திக்கு 39% வாக்குகளும், ஜே. வி. பிக்கு 20% வாக்குகளும், பொதுஜன பிரமுனவிற்கு 9% வாக்குகளும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு 5% வாக்குகளும் கிடைக்கப்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் மத்தியில் ஐக்கிய மக்கள் சக்திக்கு கூடுதலான ஆதரவு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீனின் தலைமையிலான அணியினர் இப்போது ஐக்கிய மக்கள் சக்தியோடு கூட்டு இணைவதன் காரணமாக ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு கிடைப்பதாக கூறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தேவைப்படும் 50% வாக்குகள் ஐக்கிய மக்கள் சக்திக்கு வரமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆய்வை அடுத்து அரசு வட்டத்தில் தேர்தலை நடத்துவது பற்றி தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது.

## புதிய...

(முன் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்துள்ளதாக ஹமாஸ் அறிவித்துள்ளது.

ஹமாஸ் போர் நிறுத்தத்தை முன்மொழிவது இது நான்காவது முறையாகும் என்று சர்வதேசச ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் இஸ்லாமிய ரமலான் நோன்புப் பருவத்திற்கு மனிதாபிமான உதவிகள் அதிகளவில் தேவைப்படுவதாகவும், தெற்கு காசா பகுதியில் உள்ள உணவு விநியோக மையத்தின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பாலஸ்தீன மக்கள் அவதிப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தத்திற்கான புதிய முன்மொழிவு;

மேலும் இந்த தாக்குதல் திட்டமிட்ட தாக்குதல் என காசா சுகாதார அமைச்சகம் அறிக்கை வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் இதுவரை 31,341 பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 73,134 பேர் காயமடைந்துள்ளதாகவும் காசா சுகாதார அமைச்சு மேலும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொள்ளுப்பிட்டிக்கு...

(முன் பக்கத் தொடர்ச்சி)

வீதி இலக்கம் 86 கொள்ளுப்பிட்டி கொழும்பு 3 என்ற முகவரிக்கு மாற்றபட்டது. கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் அமையப் பெற்ற அமெரிக்க தூதுவராலயம் மற்றும் இந்திய உயர்தானிகராலயம் ஆகியவற்றிற்கு மத்தியில் சினமன் கிராண்ட் இந்தோனேசிய தர ஹோட்டலுக்கு முன்பாகவும் சவுதி அரேபிய தூதுவராலயம் தற்போது செயற்படுவதாக சவுதி அரேபிய தூதுவராலயம் அறிவித்துள்ளது.







*வாசகர்களே!*

**இப்பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது. உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.**

## கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

எதிர்வரும் அக்டோபர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பாராளுமன்ற தேர்தலை நடாத்துவதற்காக அரச மட்டத்தில் தீவிரமாக பரிசீலிப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுஜன பிரமுன உட்பட அரசியல் கட்சியில் இணக்கப்பாடு ஏற்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக பாராளுமன்ற தேர்தலை நடத்துவது குறித்து பரிசீலித்து வருவதாக அரச தரப்பு முக்கியஸ்தர் ஒருவர்




## டுபாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியுதவி வழங்க உள்ளதாக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யு. ட. ஆ பௌசி தெரிவித்தார். சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் என்ற பேதமின்றி கட்டடங்களையும் மற்றும் கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவதற்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக பௌசி தெரிவித்தார். இந்த திட்டத்தின் கீழ் கொழும்பு ஹைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு பொறியியல் கட்டிடம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. முன்னாள் மேல் மாகாண உறுப்பினர் நௌசர் பௌசியின் நெறிப்படுத்தலில் இந்த நிதியம் கையாளப்படுகின்றது. இதன் முதற் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு 30மூ உதவியும் இரண்டாவது கட்டத்தில் அடுத்த 30மூ உதவியும் வழங்கி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் பௌசி தெரிவித்தார். ஆரம்ப கட்டமாக கொழும்பு, களுத்துறை மாவட்டங்களில் இந் நிதி மூலம் பல கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் பௌசிக் தெரிவித்தார். அந்த அந்த மாவட்டங்களில் உள்ள சகல கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களதும் ஆதரவுடன் இந்தத் திட்டம் முன்னெடுப்பதாகவும் பௌசி மேலும் தெரிவித்தார்.

## பாகிஸ்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் எல்லையில் உள்ள வடக்கு வஜிரிஸ்தானின் பழங்குடியினர் மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பு சோதனைச் சாவடியில் இன்று 6 பயங்கரவாதிகள் தற்கொலைப் படை தாக்குதல்களை நடத்தியதில் இரண்டு அதிகாரிகள் உட்பட குறைந்தது ஏழு பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், ஒரு லெப்டினன்ட் கர்னல் மற்றும் ஒரு கேப்டன் உள்பட ஐந்து வீரர்களுடன் கொல்லப்பட்டனர். மிர் அலி பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் தாக்குதல் நடத்திய 6 பயங்கரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து ஐஎஸ்பிஆர் அறிக்கையின்படி," பயங்கரவாதிகள் வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட வாகனத்தை போஸ்ட் மீது மோதியதாகவும், அதைத் தொடர்ந்து பல தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நடந்தன.

அதைத் தொடர்ந்து நடந்த கடும் துப்பாக்கிச் சண்டையின்போது ஆறு பயங்கரவாதிகளையும் சுட்டு கொல்லப்பட்டனர்".

பயங்கரவாத தாக்குதலில் லெப்டினன்ட் கர்னல் சையத் காஷிப் அலி மற்றும் கேப்டன் முகமது அகமது பதார் ஆகியோர் கொல்லப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.







www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 MARCH 17 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# வெற்றிடங்கள் நிரப்பப்பட மாட்டாதா?

நாட்டின் அரசாங்க பாடசாலைகளில் 42,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த பல வருடங்களாக நீடித்து வரும் இந்த ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவர்களது கல்வி முன்னேற்றம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.இதனால் வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பதில் நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளே..

தம்புள்ளை தேர்தல் தொகுதியில் உள்ள தேவஹுவ மற்றும் மொனராகலையில் உள்ள புத்தல கோனகங்ஆர கனிஷ்ட பாடசாலைகளில் பல வருடங்களாக இருந்து வரும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றி எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அண்மையில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பி முழு நாட்டினது அவதானத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

தம்புள்ளை தேர்தல் தொகுதியில் உள்ள தேவஹுவ முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் 38 வருடங்களாக கணித ஆசிரியர் ஒருவர் இல்லாதது பற்றியும் புத்தல கோனகங்ஆர கனிஷ்ட வித்தியாலயத்தில் தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் ஒருவர் இல்லாமை பற்றியும் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டில் 42000 க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை இருக்கின்றது. நாளுக்கு நாள் இத்தொகை அதிகரித்துக் கொண்டே வருகின்றது.காரணம் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் நாட்டின் பொருளாதார நிலை காரணமாக நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்கு செல்லுகின்றனர். இந்த ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கல்வி முன்னேற்றம் பெருமளவில் பின்னடைவை கண்டுள்ளது. குறிப்பாக கிராப்புற பாடசாலைகளில் இதற்கான மாற்றுத் திட்டங்கள் இல்லாமல் தவிக்கின்றனர்.

எதிர்க்கட்சி தலைவர் சுட்டிக்காட்டிய தேவஹுவ முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் இருந்து ட்யூஷன் வகுப்பொன்றுக்கு செல்வதற்கு பல மைல்கள் தூரம் நகருக்கு செல்ல வேண்டும்.

இதனால் இம்மாணவர்களுக்கு கல்வியை தொடர முடியாதுள்ளது.இக்கல்வி அமைச்சர் பல முறை இவ்வெற்றிடங்கள் நிரப்படுமென குறிப்பிட்ட போதிலும் அது பகற் கனவு போலவே இருந்து வருகின்றது. இவெற்றிடங்களால் ஆகக் கடுமையாக தமிழ், முஸ்லீம் பாடசாலைகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

வருடாவருடம் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு பதிலாக உடனடியாக ஆசிரியர்களை நியமிக்கும் திட்டமொன்றினை கல்வி அமைச்சு உருவாக்க வேண்டும். கல்வி அமைச்சர் பல முறை அறிவித்தும் நியமிப்பிப்பதற்கு தாமதமாகும் 42000 ஆசிரியர்களை நியமிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க தவறினால் நாட்டின் கல்வி நிலை மிக மோசமாக மாறுவதை தவிர்க்க முடியாது. எனவே இது குறித்து அரசாங்கமும் கல்வி அமைச்சரும் விரைவாக நடவடிக்கை எடுப்பது காலத்தின் தேவையாக இருக்கின்றது.

# பாகிஸ்தானின் புதிய அரசு எதிர் கொள்ளும் சிக்கல்கள்



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

கடந்த பெப்ரவரி மாதம் 8-ம் தேதி பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 265 இடங்கள். இவற்றில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்க ஒரு கட்சிக்கு 133 இடங்கள் தேவை. தற்போது சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் ஏ இன்சாப் கட்சி (பிடிஐ) 93 இடங்களில் வெற்றி பெற்றது. முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லீம் லீக் - நவாஸ் கட்சி (பிஎம்எல் - என்) 75 இடங்களிலும், பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) கட்சி 54 இடங்களிலும், எம்க்யூஎம் (பி) கட்சி 17 இடங்களிலும் வெற்றி பெற்றன.





இம்ரான் கானின் பிடிஐ கட்சிக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், பொதுத் தேர்தலில் அக்கட்சியின் வேட்பாளர்கள் சுயேட்சையாக போட்டியிட்டனர். அவர்கள் அதிக இடங்களில் வென்றிருந்தாலும், ஆட்சி அமைக்க தேவையான பலம் அவர்களிடம் இல்லை. இந்நிலையில் நவாஸ் ஷெரீப் தலைமயிலான பிஎம்எல்- என் கட்சி ஷெபாஷ் ஷெரீப் தலைமையில் புதிய அரசை அமைத்துள்ளது.

புதிய அரசு மற்றும் தலைவருக்கு பாகிஸ்தானில் மிகப் பெரிய நெருடல்கள் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை குறித்தான மிகப்பெரிய அளவிலான சோதனைகள் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனை புதிய அரசு எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்பதே இன்றைய நிலையாக இருக்கிறது. கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுடன் 2023 இல் ஒரு கொந்தளிப்பான ஆண்டை பாகிஸ்தான் சந்தித்தது. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 3 பில்லியன் அமெரிக்க டாலர் மீட்புப் பொதிக்கு வழிவகுத்த நிதித் திவால் நிலையும் இதில் அடங்கும். அதாவது ஒரு தேசம் திவால் நிலையை அடைகிறது என்பது எத்தனை மோசமான நிலையை உருவாக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள முற்பட வேண்டும்.

பாகிஸ்தான் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 3 பில்லியன் அமெரிக்க டாலர் மீட்புப் நடவடிக்கைகளுக்கு வழிவகுத்த நிதித் திவால்நிலையும் இதில் அடங்கும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 3 பில்லியன் அமெரிக்க டாலர் மீட்புப் பொதிக்கு வழிவகுத்த கிட்டத்தட்ட நிதிச் செயலிழப்பு இதில் அடங்கும். அது போன்ற நிலை ஒரு தேசத்தின் முடங்கும் பொருளாதார நிலையை ஏற்படுத்தலாம்.புதிய நிதியாண்டு தொடங்கும் முன், ஐஆகு நிதியத்துடன் பாகிஸ்தானின் 23வது ஒப்பந்தத்தை வழங்கியது.

இதன் மதிப்பு தொகை தோராயமாக 3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும். ஷெபாஸ் ஷெரீப் பிரதமராக புதிய அரசாங்கம் கொண்டு வரப்பட்டது. பொருளாதாரம் சீரழிந்து கொண்டிருந்த நேரத்தில், அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் உடனடி பண சமநிலை நெருக்கடி ஆகியவற்றுடன் தலைமை மாற்றம் ஏற்பட்டது.

அதாவது பாகிஸ்தான் புதிய ஆட்சி மாற்றத்தை எதிர் கொண்டது.புதிய அரசாங்கம் உடனடியாக ஐஆகு உடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது மற்றும் சாத்தியமான கடனைத் தவிர்க்க 1.1 பில்லியன் அமெரிக்க டாலர் கடனைப் பெற முடிந்தது.

தேர்தல்களுக்கு முன்னர், பாகிஸ்தான் ஒரு நிலையான அரசாங்கத்தை முழு ஐந்தாண்டு காலத்திற்கு வழிநடத்தும் மற்றும் பொருளாதாரத்தின் அத்தியாவசிய மறுசீரமைப்பில் தொடர்ந்து பணியாற்றும் என்று அனுமானம் இருந்தது. பல பொருளாதார ஆய்வாளர்கள் நவாஸ் ஷெரீப் அரசாங்கம் நீண்ட கால கடன் மற்றும் உதவித் திட்டத்தைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்த ஐஆகு க்கு விரைவாகச் செல்லும் என்று கருதினர். பாக்கிஸ்தானின் பொருளாதார சீர்திருத்தங்களின் பாதையை சர்வதேச நாணய நிதியம் தீர்மானிப்பதன் மூலம், பாகிஸ்தான் ஒரு நிலையான அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தவுடன், பொருளாதாரம் மேம்படத் தொடங்கும் என்று தோன்றியது.

ஆனால் 2024 தேர்தல் முடிவுகள் அனைத்து கணிப்புகளையும் திட்டங்களையும் தலைகீழாக மாற்றியுள்ளன. நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறத் தவறியது மட்டுமின்றி, இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியுடன் இணைந்த சுயேச்சைகளின் குழுவில் அவரது கட்சி இரண்டாவது இடத்தைப் பிடித்தது. எந்த கட்சிக்கும் பாராளுமன்ற பெரும்பான்மை கிடைக்கவில்லை. இது போன்ற நிச்சயமற்ற தன்மை எத்தனை காலம் தொடரும் என்பது கேள்விக்குறியாகவே இன்றும் தொடர்கிறது.

இந்த இறுக்கமான பொருளாதார ஸ்திரத்தன்மை அற்ற சூழ்நிலையில் 72 வயதான அரசியல்வாதிக்கு முன்பு ஏராளமான அளவில் ஆன சிக்கல்கள் இருந்து வருகிறது. புதிதாக பதவிக்கு வந்துள்ள ஷேபாஸ் ஷெரீப் அரசாங்கத்திற்கு பல்வேறு சவால்கள் காத்திருக்கிறது என்பதே உண்மையாகும்.

1) பொருளாதார நெருக்கடி

ஷெபாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் அரசாங்கம், பொருளாதார உறுதியற்ற தன்மையால் நாட்டின் வளர்ச்சி மற்றும் செழிப்பு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், பணவீக்கம், வேலையின்மை, கடன் சுமை, குறைந்த மனித மூலதன மேம்பாடு மற்றும் மெதுவான எரிசக்தி பற்றாக்குறை உள்ளிட்ட பல சவால்களை எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடிப்படை உணவுப் பொருட்கள், மின்சாரக் கட்டணம் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் உயரும் விலையையும் பாகிஸ்தானியர்கள் ஏற்கின்றனர்.

இந்தப் பொருளாதாரத் தடைகளைத் தீர்ப்பதற்கு, வருவாயை வலுப்படுத்துதல், ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சியை ஊக்குவித்தல், நிதி நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்தல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கும் விரிவான மாற்றங்கள் அவசியம். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரும், அடுத்த மாதம் காலாவதியாகும் தற்போதைய திட்டத்துடன் கூ3 பில்லியன் ஐஎம்எஃப் பிணை எடுப்பைப் பெறுவதற்கான தனது சாதனையைப் பின்பற்ற வேண்டும்.

2) அரசியல் ஸ்திரமின்மை

இம்ரான் கான் ஆதரவு வேட்பாளர்கள் பொதுத் தேர்தலில் குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பாக செயல்பட்டனர், 93 இடங்களைப் பெற்றனர், பல குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகியிருந்தாலும், எந்த வகையான பொதுப் பதவியையும் வகிக்க தகுதியற்றவர்கள். 75 இடங்களை வென்ற பிறகு, ஷேபாஸ் ஷெரீப்பின் PML-N 54 இடங்களைப் பெற்ற PPP உடன் கூட்டணி அரசாங்கத்தை அமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஆய்வாளர்களின் கூற்றுப்படி, ஷெஹ்பாஸ் ஷெரீப்பின் நிர்வாகத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. வழக்கமான அரசியல் அமைதியின்மை, இராணுவம் மற்றும் சிவிலியன் ஸ்தாபனங்களுக்கிடையில் துருவமுனைப்பு மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் பழுதடைந்த அரசியலால் பயனுள்ள நிர்வாகம் மற்றும் கொள்கை உருவாக்கம் தடைபடுகிறது.

கூடுதலாக, மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களுக்கிடையேயான மோதல்கள், குறிப்பாக சிந்து மற்றும் பலுசிஸ்தான் போன்ற மாகாணங்களில், வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் இணக்கமான தேசியக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் தடையாக உள்ளன.

3) அதிகரித்து வரும் போர்க்குணம்

நாட்டின் மோசமான பாதுகாப்பு நிலைமையை ஷெபாஸ் ஷெரீப் நிர்வாகம் சமாளிக்க வேண்டியிருக்கும். குறிப்பாக கைபர் பக்துன்க்வா மற்றும் பலுசிஸ்தான் மாகாணங்களில் இஸ்லாமிய அரசு மற்றும் தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் (TTP) போன்ற தீவிரவாத அமைப்புகளால் பாகிஸ்தான் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. எல்லையில், ஆப்கானிஸ்தானுடன் அதிக விரோதமும் இரு தேசங்களுக்கு இடையே காணப்படுகிறது.

2023ல், பாகிஸ்தானில் 2016ல் இருந்ததை விட அதிகமான பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்தன. கடந்த ஆண்டு, தாக்குதல்களில் சுமார் 550 பாதுகாப்புப் படையினரும், 400 பொதுமக்களும் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் முன்னாள் ஐ.நா. பிரதிநிதியான மலிஹா லோதியின் கூற்றுப்படி, ஷெபாஸ் ஷெரீப்பின் நிர்வாகம் பாகிஸ்தானின் இராணுவ அமைப்புடன் ”பயங்கரவாத நடவடிக்கைகளின் எழுச்சியை சமாளிக்க” மற்றும் பிற பாதுகாப்பு சவால்களுடன் நெருக்கமாக ஒத்துழைக்க வேண்டும்.

இது போன்ற பல்வேறு நடைமுறை சிக்கல்களால் சூழப்பட்ட நிலையில் பதவிக்கு வந்துள்ள புதிய அரசு இதனையெல்லாம் சமாளித்து வெற்றி பெறுவது சாத்தியம்தானா என்கிற சிக்கலான கேள்விகளுக்கு பதில் காலத்தின் கைகளில் தான் உள்ளது என்பதே யதார்த்தமான உண்மை என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதே உண்மையாகும்.....!

# கரையோரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள சுற்றுலாத்துறையை நாட்டுக்குள் கொண்டு வந்து பொருளாதாரத்தை பலப்படுத்த முடியும்

## ஹேறாலுவாகொட "செரின் ரிவர் பார்க்" சூழலியல் பூங்காவை திறந்து வைத்து ஜனாதிபதி தெரிவிப்பு

(அஸ்ரப் ஏ சமட் )

நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் தென்பகுதிக்குத் தனித்துவமான இடம் உள்ளது என்றும் காலியை பிரதான சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும், கடற்கரையோரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள சுற்றுலாத்துறையை நாட்டிற்குள் கொண்டு வந்து பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

காலி, ஹேறாலுவாகொட"செரின் ரிவர் பார்க்" சூழலியல் பூங்காவை கடந்த (13) ஆம் திகதி பிற்பகல் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் தெரிவித்தார்.

"2021 ஆம் ஆண்டு நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமை இக்கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பீடு 440 மில்லியன் ரூபாவாகும். குளம், நடைபாதைகள், இரும்புப் பாலங்கள், சிறுவர் பூங்காக்கள், வர்த்தக நிலையங்கள், சுற்றுச்சூழல் கட்டமைப்புகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்தப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக சூரிய ஒளியில் இருந்து மின்சாரம் பெறப்படுகிறது.





பிரதேச மக்களின் விவசாயப் பயிர்கள் மற்றும் ஏனைய உற்பத்திப் பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்யும்வேலைத்திட்டமும் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மேலும், பல தசாப்தங்களாக ஹேறாலுவாகொட மற்றும் ஓபாத பிரதேச மக்கள் எதிர்நோக்கும் வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்தவும் இந்தப் பூங்கா பங்களிக்கும்.

இந்த சூழலியல் பூங்காவை வெற்றிகரமாக நிர்மாணிப்பதில் பங்களிப்பு செய்தவர்களுக்கு ஜனாதிபதி சான்றிதழ்களையும் வழங்கினார். மேலும் இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்தத் திட்டம் ஒரு பொருளாதார மேம்பாட்டுத் திட்டமாகும். நாம் இதுபோன்ற திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும். இன்று காலி முக்கிய சுற்றுலாத் தலமாக மாறியுள்ளது. அதை நாம் மேலும் மேம்படுத்த வேண்டும். இதன் மூலம் இப்பகுதி மக்கள் பெருமளவு வருமானம் பெற முடியும்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் அதே வேளையில் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க வேண்டும். அதன்படி, இந்தப் பகுதியில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கத் தனியான சட்டம் கொண்டு வரப்படும். இங்கு கட்டிடங்கள் மாத்திரம் இருந்தால் இப்பகுதிகளுக்கு யாரும் வருகை தர மாட்டார்கள்.

சுற்றுலா துறையில் தென் மாகாணத்திற்கு ஒரு சிறப்பிடம் உள்ளது. காலி கோட்டையில் உள்ள அனைத்து அரச அலுவலகங்களையும் அகற்றி சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் அவற்றை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அத்துடன், முறையான திட்டமிடலின் ஊடாக காலி நகரை சுற்றுலாப் பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கும் நாம் செயற்பட்டு வருகின்றோம். அதன்படி, நாட்டின் முக்கிய சுற்றுலா நகரமாக காலி மாறும்

சுற்றுலாத்துறை என்பது நாட்டிற்கு விரைவாக வருமானம் தரும் துறையாகும். அதிக பணம் செலவழிக்கும் சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் நாட்டிற்கு அழைத்து வர முயற்சிக்க வேண்டும்.

வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்று யாரும் நினைக்கவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எரிபொருள் இருக்கவில்லை. உரமோ மருந்தோ இல்லை. இன்று அனைத்தும் இருக்கிறது. அதேபோன்று மக்கள் பணம் சம்பாதிக்கிறார்கள்.

மேலும், கறுவா விளைச்சலில் நாம் கவனம் செலுத்த வேண்டும். தேயிலை பயிருக்கு பொருத்தமான இடங்களில் தேயிலை பயிரிடுவதன் மூலமும், ஏனைய இடங்களில் கறுவா பயிரிடுவதன் மூலமும் அதிக வருமானத்தை ஈட்ட முடியும். அதேபோன்று, இப்பகுதிகளுக்கு தொழில்நுட்ப கல்வி வழங்கும் நிறுவனங்களை கொண்டு வர திட்டமிட்டுள்ளோம்.

இந்த நடவடிக்கைகளால் காலி பெரும் அபிவிருத்தி அடையும் என நம்புகிறோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன, பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, தென் மாகாண ஆளுநர் விலி கமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, சம்பத் அத்துகோரல உள்ளிட்ட பல அரசியல் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சாய்ந்தமருது அரச சேவைகள் ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்துக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு!



(நூருல் ஹுதா உமர் )

சாய்ந்தமருது பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட அரச சேவைகள் ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் 17 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நிதியத்தின் தலைவர் ஐ. அப்துல் குத்தூஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலக கணக்காளர் என்.வி.எம். லரீப் சிறப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட ஓய்வூதிய நிதியத்தின் செயலாளர் ஏ. உதுமாலெப்பை, சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்ஸான், CMSO ஏ.சி. முகம்மட், அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ. சாஜிதா கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது நிதியத்திலிருந்து மரணித்த அங்கத்தவர்களுக்காக துஆ பிராத்தனை இடம்பெற்றதோடு நிதியத்தில் 15 வருடங்களுக்கு மேல் பணியாற்றி ஓய்வுபெற்ற எம்.ஐ.ஏ. ஜப்பார் கௌரவிக்கப்பட்டதோடு அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

மேலும் புதிய நிர்வாக தெரிவும் இடம்பெற்றது. இதன் புதிய தலைவராக எம்.எம்.எம். இஸ்மாயில், செயலாளராக ஏ.எல். மீராலெப்பை, பொருளாளராக ஐ.எல். ஹம்ஸா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அதனை தொடர்ந்து ஏனைய உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

## ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் பேராளர் மாநாடு







(நூருல் ஹுதா உமர் )

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் பேராளர் மாநாடு அண்மையில் கொழும்பு 7, தேசிய நூலகம் மற்றும் ஆவணச் சேவைகள் சபை கேட்போர் கூடத்தில் கட்சியின் பிரதித் தலைவர் அக்பர் அலி (நாசார் ஹாஜி) தலைமையில் நடைபெற்றது.

கட்சியின் பொருளாளரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ. ஏ. கலீலுர் ரஹ்மான் கட்சியின் கணக்கு அறிக்கையை சமர்ப்பித்து கொழும்பில் தேர்தல் வாக்கு மூலம் ஜனநாயக ரீதியில் பேரம் பேசி எமது உரிமைகளை எவ்வாறு வென்றெடுப்பது என கூடியிருந்த கட்சி உறுப்பினர்களுக்கு விளக்கி உரை நிகழ்த்தினார்.

கட்சியின் செயலாளர் ஹசன் அலி செயலாளர் அறிக்கையை சமர்ப்பித்து உரையும் நிகழ்த்தியதோடு மௌலவி சபீர் இஸ்லாமிய அரசியல் என்ற தொனியில் உரை நிகழ்த்தினார்.

கல்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.ஹிஸாம், கட்சியின் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான காதர், முஸம்மில், துறைமுக தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஹரீப், பாயிஸ் ஆகியோர் இதில் இணைந்திருந்தனர்.

## சுயமாக தொழில் தொடக்கி பலருக்கு தொழில் வழங்குனராக மாறும் கல்விமுறையில் நாம் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும்

### கிழக்கின் கேடயம்



(நூருல் ஹுதா உமர் )

நாம் முயற்சிக்காதவிடத்து எந்த மாற்றமும் நிகழாது. மாற்றத்துக்கான முதல் அடியை எடுத்து வைக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். என அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்களின் முன்னாள் தலைவரும் கிழக்கின் கேடயத்தின் தலைவருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச இளைஞர்கள் சந்திப்பு கிழக்கின் கேடயம் நாவிதன்வெளி கிளைத் தலைவர் ஏ.எல். எம். அர்சாத் தலைமையில் நடைபெற்ற போது அங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இன்னொருவருக்கு அநியாயம் செய்யாமல் தமது வாழ்க்கைக்கு தேவையான வருமானத்தை தேடிக்கொள்வது கல்வியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். வாலிப வயதில் கல்வியைத்தவிர வேறு எந்த சிந்தனைக்கும் இடம்கொடுக்கக்கூடாது. அதேநேரம் சுயமாக தொழில் தொடக்கி பலருக்கு தொழில் வழங்குனராக மாறும் கல்விமுறையில் நாம் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும்.

அத்தோடு சமூக அக்கறை கொண்டவர்களாகவும் நாம் இருக்க வேண்டும். உங்களில் இருந்து நல்ல தலைவர்கள் உருவாகி நமது மக்களை நன்றாக வாழவைக்க கூடியவர்களாக மாறவேண்டும். இன்று நாம் நமது மக்கள் படுகின்ற துன்பங்களுக்கு மூல காராணம் சரியான தலைவர்களை நாம் உருவாக்க தவறியமைதான். ஆகவே அதிலும் நாம் கவனத்துடன் அக்கறை செலுத்த வேண்டும் என தெரிவித்தார்



கொல்லந்தலுவ தக்கியா பள்ளி வாசலில் இயங்கி வரும் அல் மத்ரஸதுல் தாருல் உலூம் குர்ஆன் மத்ரஸா மாணவர்களின் மாணவர் மன்ற நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. படம்: ஏ.எம்.எம். இப்ராஸ்

# நானா நீயா அவனா?


சபீர் மொஹமட்

# என்னை எவ்வாறு விரட்டினார்கள்?

## முன்னாள் ஜனாதிபதியின் அனுபவப்பகிர்வு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதிய "குமன்த்ரனய" அதாவது சதி என்கின்ற புத்தகம் தான் இந்த வார பத்தி.

இந்த புத்தகத்தின் பெயர் சாதி. முகநூல் பயனாளர் ஒருவர் எழுதியிருந்த ஒரு பதிவிலிருந்து நான் இதனை ஆரம்பிக்கின்றேன்.

'இந்த எழுத்தாளருடைய பிற நூல்களையும் உங்களால் எதிர் வருகின்ற நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்"

நூல்கள் –

சர்கரை திருடனும் 69 திருடர்களும் – சிறுகதை தொகுப்பு

எக்ஸ்பிரஸ் பேல் கப்பல் சாகசம் – நாவல்

அண்ணனிடம் கேட்டுக் கூறுகின்றேன் – காவியம்

மீதி மூன்றும் எங்கே – கணித நூல்

எதிரியை எவ்வாறு வெள்ளை வானில் கடத்துவது – நாவல்

மிக் விமானங்கள் பற்றிய ஒரு அகராதி

கம சமக பிழிசதர – நகைச்சுவை நாவல்

ஞான அக்கா – காதல் காவியம் மற்றும் 'நான் தான் நன்றாக செய்தேன்' சிறுகதை தொகுப்பு !!

கோட்டாபய ராஜபக்ஷ எழுதிய இந்த நூலானது பல கோணங்களிலும் மக்களால் விமர்சிக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் இன்னும் ஒரு சாரார் இந்த நூலை வைத்து ஊரு பாசையில் கூறுவதாயின் 'ஆத்தல்' எடுத்து வருகின்றார்கள். உண்மையிலேயே என்னதான் இந்த நூலில் இருக்கின்றது கொஞ்சம் தெளிவாக பார்ப்போம்.

எல்லாவற்றுக்கும் முதலாக இந்த நூலின் அட்டைப்படம் பலருடைய முகத்திற்கும் சாணியை வீசியது போல் ஒரு அடியை வழங்கியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி அதாவது இந்த நூலின் எழுத்தாளரை இன்னும் கடவுள் போல் வணங்குகின்ற ஒரு கூட்டம் எம் மத்தியில் இருக்கின்றார்கள். இந்த புத்தகம் வெளிவரும் வரை அவர்களுடைய தர்க்கமாக இருந்தது, 'முன்னாள் ஜனாதிபதி நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு தனது பதவியை ராஜினாமா செய்து நாட்டை விட்டு சென்றார். இதுதான் உண்மை' என்பதாகும்.

ஆனால் இந்த நூலின் அட்டைப்படத்திலே பெரிதாக "ஜனாதிபதி பதவியில் இருந்து என்னை விரட்டிய சதி" என எழுதப்பட்டுள்ளது. பக்தர்கள் பதவியை அவர் ராஜினாமா செய்ததாக கூறுகின்ற அதே வேலை பக்தர்களுடைய கடவுள் இல்லை என்னை விரட்டினார்கள் என்பது உண்மையிலேயே நகைப்புக்குரிய ஒரு விடயம்.

குறித்து சதி புத்தகத்தில் அதிகமாக எழுதப்பட்டிருக்கின்ற ஒரு சில வாக்கியங்கள் உள்ளன. அவை "சிங்கள பௌத்தர்கள்", "நான் சிங்கள பௌத்தர்களுடைய தலைவன்","என்னை சிங்கள பௌத்தர்களே தெரிவு செய்தார்கள்", "சிங்கள பௌத்தர்களுக்கு எதிராக இந்த நாட்டில் சதித்திட்டம் நடைபெறுகின்றது" என்பனவாகும். இந்த புத்தகத்தை நீங்கள் வாசிக்கும் போது இதுபோன்ற வாக்கியங்களை எக்கச்சக்கமாக காணலாம்.

ஒரு சில அரசியல் விமர்சகர்கள் இந்த புத்தகம் குறித்து கொஞ்சம் ஆழமாக சென்று தமது விமர்சனத்தை கூறியிருந்தார்கள். அதிலே அவர்கள் மூன்று முக்கியமான காரணங்கள் காரணமாக இந்த புத்தகம் மக்கள் மத்தியில் சென்றடைய கூடாது என்ற வாதத்தை முன் வைத்திருந்தார்கள். அவற்றைக் கொஞ்சம் விரிவாக பார்ப்போம்.

முதலாவது, இந்தப் புத்தகம் முற்று முழுதாக மீண்டும் ஒருமுறை இந்த நாட்டில் இன வன்முறையை தூண்டும் விதத்தில் காணப்படுகின்றது. குறிப்பாக சிங்களவர்களுக்கும் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களுக்கும் இடையே விரிசல்களை ஏற்படுத்தும் விதத்தில் பல இடங்களிலும் பல விடயங்கள் பற்றி போலியாக குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அடுத்ததாக, இந்த நாட்டில் தற்போது மிகப்பெரிய ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டளவில் அது பாரிய நெருக்கடியாக காணப்பட்டது. இன்னும் அதன் தாக்கங்கள் எமது அன்றாட வாழ்வில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் குறித்த புத்தகத்தில் எழுத்தாளர் அதாவது முன்னாள் ஜனாதிபதி இந்த பொருளாதார நெருக்கடிக்கு காரணம் தன்னை விரட்டியமை என குறிப்பிட்டுள்ளார். ஆனால் பொருளாதார நிபுணர்களின் தெளிவான தரவுகள் மற்றும் ஆராய்ச்சிகள் கூறுகின்ற விடயம் யாதெனில் இந்த பொருளாதார நெருக்கடிக்கு மிக முக்கியமான காரணம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எந்தவித திட்டமிடலும் இன்றி பொடுபோக்குத்தனமாக எடுத்த தவறான முடிவுகள் என்பதாகும். எனவே இந்த ஒன்றுக்கொன்று முரணான போலியான தகவல்கள் இரண்டாவது மிகப்பெரிய பிரச்சினையாக விமர்சகர்கள் கூறுகின்றார்கள்.

மூன்றாவதாக இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது என்ற பொய். அதனை தெளிவுபடுத்துகின்ற ஆய்வாளர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். அதாவது 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற குண்டு தாக்குதல்களைத் தொடர்ந்து ஜனாதிபதியாக போட்டியிடுவதற்கு முன் வந்த கோட்டாபய ராஜபக்சே கூறிய ஒரு தர்க்கமாக இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது என்பதை குறிப்பிடலாம். அதனையே காரணம் காட்டி அவர் ஜனாதிபதியாகவும் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். ஆனால் தற்போது மீண்டும் தன்னை விரட்டியமையால் நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது என குறிப்பிடுவது ஒரு மிகப்பெரிய போலியான விடயமாகவும் நாட்டின் பாதுகாப்பிற்கு உண்மையிலேயே ஒரு அச்சுறுத்தலாகவும் காணப்படுகின்றது, என கூறுகின்றார்கள்.

இலங்கையின் நடப்பு அரசியல் பற்றி ஏதோ ஓரளவு தெரிந்த எவராலும் இந்த புத்தகத்தை வாசித்தால் நிச்சயமாக பக்கம் பக்கமாக தமது விமர்சனங்களை முன் வைக்கலாம். 1800 ரூபாய் கொடுத்து இந்த புத்தகத்தை வாங்கி உண்மையிலேயே கோபப்படுவதை விட எங்கள் இரத்தத்தை வயிறு குலுங்க சிரித்து சுத்தப்படுத்திக் கொள்ளலாம், என ஒரு பேஸ்புக் பதிவை நேற்று நான் பார்த்தேன்.

இந்த நூலில் ஓரிடத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "பல்வேறு காரணங்களால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு அரகலய போராட்டத்தின் மூலம் என்னை எதிர்த்தார்கள். குறிப்பாக கொழும்பிலே நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும் இது வெளிப்படையாக தெரிந்தது. நான் தொடர்ந்து ஆட்சியில் இருந்தால் சிறுபான்மையினருக்கு பாதகமாக பௌத்தர்கள் பலம் பெற்று இருப்பார்கள் என்ற அச்சம் இதற்கு காரணமாக இருக்கலாம்" கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். ஒரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி அந்த நாட்டின் பெரும்பான்மை மக்களை நோக்கி எழுதியுள்ள ஒரு புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுவதால் எப்பேர்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம் ?

அடுத்ததாக பல இடங்களிலும் இந்த புத்தகத்தில் சர்வதேச அனுசரணையில் நிகழ்ந்த ஆட்சி மாற்றம் என குறிப்பிடப்பட்டுள்ளது. குடிமக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் ஒரு ஆட்சியாளன் மக்களை ஆட்சி செய்து கொண்டிருக்கும்போது மக்கள் வீதிகளுக்கு இறங்கி ஆட்சியாளர்களுக்கு எதிராக போராடுவதற்கு யாருடைய உதவிகளும் தேவை இல்லை என்பதை இரண்டு வருடங்களுக்கு முன்னரே மக்கள் நிரூபித்தார்கள். ஆனால் தற்போது மீண்டும் ஒரு முகமூடி அணிந்து கொண்டு மக்களால் விரட்டி அடிக்கப்பட்ட குறித்த ஆட்சியாளர்கள் தங்களை நியாயப்படுத்திக் கொள்வதற்காக மக்கள் போராட்டங்களை சர்வதேச சதி என திசை திருப்ப முயற்சிக்கின்றார்கள்.

எதிர் வருகின்ற நாட்களில் எமது நாட்டு அரசியலில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படப்போகும் என்பது பற்றி தெரிந்து கொள்வதற்கு இந்த ஒரு புத்தகமே போதுமானது. சிறுபான்மை மக்களாக இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்ற நாங்கள் நிச்சயமாக எதிர் வருகின்ற நாட்களில் பல கோணங்களிலும் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேரிடலாம். விரட்டப்பட்டவர்கள் பழி தீர்ப்பதற்கு இன்னும் இன்னும் ஆவேசமாக பாய்ந்து வருவார்கள். அவதானமாக இருப்போம் !!

# இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாற்றுவழி பிணக்கு தீர்வு





(இஸட்.ஏ.றஹ்மான்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி ஒதுக்கீட்டில் பிரிட்டிஷ் கவுன்சில் மூலம் முஸ்லிம் எய்ட் நிறுவனம் மற்றும்

தென்கிழக்கு பல்கலைக்கழக சமூக நல்லிணக்க நிலையத்தோடு இணைந்து பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் அவர்களின் வழிகாட்டலுடன் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாற்றுவழி பிணக்கு தீர்வு தொடர்பான செயலமர்வு பல்கலைக்கழக கலைப்பீட கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இச் செயலமர்வில் பல்கலைக்கழக சமூக நல்லிணக்க மையத்தின் பணிப்பாளர் Dr.M.அப்துல் ஜப்பார், சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் SM.ஐயூப், செயலமர்வின் வளவாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.றிஸ்வான் ஆகியோருடன் பிரிட்டிஷ் கவுன்சில் SEDR செயற்றிட்ட வளவாளர், நுஸரத் பெனாஸிர் பாரூக் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

SEDR செயல்நிலை அமைப்பின் இலகுபடுத்துனர் யுஉளூ.அஸ்மத்துள்ளா அவர்களினால் வசதி செய்யப்பட்டு அக்னிவில் குழுவின் தலைவர் ஹூஸ்னிஃ பாரிஜ் அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மு.லுஸாந் உள்ளிட்டோர் பங்குபற்றினர்.



# மருதமுனைப் பிரதேசத்தில் இடம்பெற்ற இரட்டைக் கொலை..!

## நடந்தது என்ன?



தனது இரண்டு பிள்ளைகளையும் கொன்று பின்னர் தற்கொலைக்கு முயற்சித்த தந்தை ஒருவரின் செயல் தொடர்பில் பத்திரிகைகளிலும் இணையங்களிலும் தொலைக் காட்சிகளிலும் வானொலிகளிலும் முதன்மை செய்திகளாக தற்போது வலம் வந்து கொண்டு இருக்கின்றன

தனது இரு விசேட தேவையுடைய பிள்ளைகளையும் பராமரித்து வந்த மனைவி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் புற்றுநோய் காரணமாக மரணமடைந்த நிலையில் மனைவியின் இழப்பு தன்னை வெகுவாக பாதித்திருந்ததாகவும் இதனால் எனது பிள்ளைகளை பராமரிப்பதற்கு சிரமமாக இருந்த காரணத்தினால் தான் இவ்வாறு செயற்பட்டதாக தனது வாக்குமூலத்தில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு தற்போது கல்முனை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வரும் மருதமுனை அல்பாக்கியாதுஸ் ஸாலிஹாத் ஜும்ஆ வீதியை சேர்ந்த 63 வயது மதிக்கத்தக்க முஹம்மது மிர்சா முஹம்மது கலீல் தெரிவித்திருக் கின்றார் எனத் தெரிவிக்க ப்படுகிறது.

பெரிய நீலாவணை முஸ்லிம் பிரிவு மருதமுனை அல்பாக்கியாதுஸ் ஸ ாலிஹாத் ஜும்ஆ வீதியில் உள்ள வீடு ஒன்றில் (14) ஆம் திகதி காலை 8 மணியளவில் குறித்த இரட்டை கொலை இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

**இந்த இரட்டை கொலை சம்பவம் தொடர்பாக நடந்தது என்ன?**

குறித்த வீட்டில் மனைவியின் இழப்பின் பின்னர் தனது இரு விசேட தேவையுடைய பிள்ளைகளையும் பராமரித்து வந்த தந்தையான 63 வயது மதிக்கத்தக்க முஹம்மது மிர்சா முஹம்மது கலீல் என்பவருக்கு வாழ்க்கையில் விரக்தி வந்திருக்கும் நிலை அவரது அண்மைக்கால செயற்பாட்டில் உணர முடிகின்றது

அதாவது தனது மனைவியின் நோய் கால கட்டத்தில் அவரை பராமரிக்க மற்றும் வைத்தியசாலைக்கு அழைத்து செல்வதற்கு ஒரு சிற்றூர்தியை கொள்வனவு செய்திருந்தார்.

இந்த சிற்றூர்தியை சம்பவ தினத்திற்கு முன்னர் மற்றுமொரு தரப்பினருக்கு விற்பனை செய்திருந்ததாகவும் மறுமணம் செய்வதற்கு ஆர்வமாக அவர் இருந்த போதிலும், தனது இரு விசேட தேவையுடைய பிள்ளைகளை சுட்டிக்காட்டி தடைபட்டுள்ளதாகவும்,



குறித்த நபர் அமைதியான மென்மையான போக்குள்ள அமைதியான ஒரு மனிதன் என அப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இதனை விட தந்தையினால் கொல்லப்பட்ட இரு பிள்ளைகளும் அப்பகுதியில் உள்ள விசேட தேவையுடைய பிள்ளைகளை அனுமதிக்கும் ஹியூமன் லிங்க் பாடசாலைக்கு கல்வி கற்பதற்கு சேர்த்திருந்தனர். இருந்த போதிலும் அவரது மனைவியின் இறப்பின் பின்னர் அப்பிள்ளைகளை அப்பாடசாலைக்கு அனுப்புவதை இடை நிறுத்தி கொண்டார் என்ற மற்றுமொரு தகவலும் வெளியாகி இருந்தது.

மேலும் 6 பேர் கொண்ட இக்குடும்பத்தில், படுகொலை செய்யப்பட்ட இரு பிள்ளைகளை தவிர வெளிநாடுகளில் தொழில் புரியும் ஏனைய இரு பிள்ளைகளும் அண்மையில் மரணமடைந்த தாயின் மரண அடக்கத்தில் கலந்து கொள்வதற்காக வெளிநாட்டில் இருந்து இலங்கை வந்த விடயமும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவ்வாறான நிலையில் 29 வயது மதிக்கத்தக்க முஹம்மது கலீல் முஹம்மது நிகாஸ் தினமும் அருகில் உள்ள மருதமுனை அல்பாக்கியாதுஸ் ஸாலிஹாத் ஜும்ஆ மஸ்ஜிதில் தனது ஐவேளை தொழுகையையும் விடாமல் செய்து இறைபணியை முன்னெடுத்தவர் என்பதுடன், அவர் வழமையாக ஏனைய மக்களோடு இணைந்து செயற்படுபவர் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

**இரட்டை கொலை எவ்வாறு நடைபெற்றது?**

வீட்டின் படுக்கையில் இருந்த இரு பிள்ளைகளையும் கத்திகளை பயன்படுத்தி கழுத்தை அறுத்து கொலை செய்த தந்தை, சம்பவத்தை கைத்தொலைபேசி ஊடாக தனது சகோதர சகோதரிகளுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் சம்பவ வீட்டிற்கு உடனடியாக வந்த சகோதர சகோதரிகள் அங்கு கண்ட காட்சியை கண்டு அபயக்குரல் எழுப்பியதுடன் கத்தியோடு தற்கொலைக்கு முயற்சித்திருந்த தனது சகோதரனை அருகில் உள்ள கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு பொதுமக்களின் உதவியுடன் அழைத்து சென்றனர்.

பின்னர் சம்பவ இடத்தில் இரத்த வெள்ளத்துடன் காணப்பட்ட முஹம்மது கலீல் முஹம்மது நிகாஸ் (வயது-29) முஹம்மது கலீல் பாத்திமா பஸ்மியா (வயது-15) ஆகியோரின் நிலை கண்டு அவ்விடத்தில் வந்திருந்த உறவினர்கள் மக்கள் தங்களை அறியாமல் இந்த நோன்பு (ரமழான்) மாதத்தில் இவ்வாறு நடந்து விட்டதே என கதறி அழுது பெரிய நீலாவணை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸ ார் சடலங்கள் காணப்பட்ட வீட்டிற்கு உரிய பாதுகாப்பினை வழங்கினர். தடயவியல் பொலிஸாரும் மோப்பநாய் பிரிவினரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்

பின்னர் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் அங்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டு இறுதியாக பிரேத பரிசோதனைக்காக அம்பாறை பொது வைத்தியசாலைக்கு சடலங்கள் அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் இரவு உறவினர்களிடம் இரு சடலங்களும் கையளிக்கப்பட்டுள்ளன.

# சவூதி அரேபியாவிற்கான தூதுவர் பாராட்டி கௌரவிப்பு



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

இலங்கையின் சவூதி அரேபியாவிற்கான தூதுவராக நியமிக்கப்பட்ட அமீர் அஜ்வாத்தை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியரும் அரப் நியூஸ் கொழும்பு நிருபருமான மொஹமட் ரசூல்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் மொஹமட் ரசூல்தீன் ஆகியோர் இணைந்து சவூதி அரேபியாவிற்கான தூதுவர் அமீர் அஜ்வாத்திற்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

இதில் பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்து கொண்டதுடன் பங்களாதேஸ், இந்தோனேசியா, நேபால் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் இராஜதந்திரிகள் மற்றும் விசேட அழைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



கொழும்பு சாஹிராக் கல்லூரியின் பழைய மாணவர்கள் 2009. குழுவின் 15வருட பூர்த்தினை முன்னிட்டு "தேசத்திற்கு கல்வி" எனும் திட்டத்தின் மூலம் ஊவா மாகாணத்தில் பின்தங்கிய பிரதேசத்தில் கல்வி பயிலும் சரஸ்வதி வித்தியாலய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை குழுவின் தலைவர் கல்லூரி ஆசிரியையிடம் வழங்கி வைத்தார். படம்: அஷ்ரப் ஏ சமத்

# சர்வதேச பாடசாலையின் மழலையர் சந்தை



(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

மத்திய முகாம் லோடஸ் ஜெல்பன் லங்கா சர்வதேச ஆங்கில மொழி பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் ஆரம்ப பிரிவு மாணவர்களின் பொதுச் சந்தை அண்மையில் (15) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் தங்களது தோட்டங்களில் உள்ள பழங்கள், மரக்கறி வகைகள் மற்றும் கீரை வகைகளை விற்பனைக்கு காட்சிப்படுத்தினர்கள்.

இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என அதிகளவானோர் கலந்து கொண்டனர்.

# ஊடகங்கள் ஊடாக மக்களை அரசு ஏமாற்றுகிறது விஜித ஹேரத் எம.பி. குற்றச்சாட்டு



ஐ.எம்.எஃப். பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையொன்றுக்காக ஜனாதிபதி கடந்த தினமொன்றில் எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்திருந்தார். எனினும் இந்த பேச்சுவார்த்தைக்காக ஐ.எம்.எஃப். பிரதிநிதிகள் வருகைதராமை பற்றி நாங்கள் வினவினோம். அரசாங்கம் அத்தகைய கலந்துரையாடலுக்காக தமக்கு அழைப்பு விடுக்கவில்லை என்பதை அவர்கள் தெளிவாகவே கூறினார்கள்.

எனினும் ஐ.எம்.எஃப். பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்காக எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்ததாகவே ஜனாதிபதி மக்களுக்கு கூறினார். எனினும் முழு நாட்டினதும் மக்களை ஊடகங்களினூடாக ஏமாற்றுகின்ற வேலையை அரசாங்கம் செய்திருந்தது.

ஐ.எம்.எஃப். உடனான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு, அனைத்துக் கட்டணங்களையும் உயர்த்தி, வரிகளை அதிகரித்து, நாட்டின் வளங்களை விற்றுக்கொண்டிருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இவ்விதமாக பாரிய வஞ்சனையில் ஈடுபட்டு ஐ.எம்.எஃப். பிரதிநிதின் இல்லாமல் அரசாங்கப் பிரதிநிதிகள் மாத்திரம் பங்கேற்ற கூட்டமொன்றுக்கு எதிர்க்கட்சியை அழைத்திருந்தார்.

நாணய நிதியத்துடன் கைச்சாத்திட்ட தொழில்நுட்ப ஒத்துழைப்பு அறிக்கையை சமர்ப்பியாமை பற்றி பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வினவி இருந்தார். அந்த அறிக்கையை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு என ஐ.எம்.எஃப். பிரதிநிதிகள் எம்மிடம் கூறினார்கள்.

அரசாங்கம் எதையுமே மறைப்பதில்லையென பிரச்சாரம் செய்தாலும் இந்த முக்கியமான அறிக்கைகள் எவற்றையும் நாட்டுக்கு வெளிப்படுத்தவில்லை. பசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக இருந்தவேளையில் ஐ.எம்.எஃப். உடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகள் பற்றி அன்று ரணில் விக்கிரமசிங்கவும் கேள்விக்குட்படுத்தினார். அந்"த இரகசிய அறிக்கைகள் எவற்றையும் சமர்ப்பிக்க முடியாதென அன்று பசில் ராஜபக்ஷ கூறினார். தற்போது ரணில் விக்கிரமசிங்கவும் அவ்வாறே நடந்து கொள்கிறார்.

# முஸ்லிம்களின் நிலங்களை சூறையாடிய நிர்வாக பயங்கரவாதம்



ஏ.எச்.ஏ.ஹுஸைன்

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர்.17 )

1990ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் எனப்படும் எல்ரீரீஈ இயக்கத்தினரின் உயிர்க்கொலைகளால் கள்ளியங்காடு கிராமத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேறியவுடனே அங்கிருந்த பள்ளிவாசல் சிறிது சிறிதாகத் தரைமட் டமாக்கப்பட்டது.

அது மாத்திரமல்ல அங்கிருந்த முஸ்லிம் மையவாடியின் சுமார் இருபது பேர்ச்சஸ் காணியும், சாஹிறா கல்லூரியைச் சுற்றி இருந்த காணியும் அத்துமீறி தமிழ் மக்களால் கையகப்படுத்தப்பட்டன.

முறையிலும் உடமையை அபகரிக்க முடியாது. அவ்வாறு செய்யப்படும் பொழுது அதற்கெதிராக மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யும் உரிமையும் வக்ப் சட்டத்தின்படி உள்ளது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க சில தடைகள் உருவாகின, சில தடைகள் வேண்டுமென்றே மட்டக்களப்பை நிருவகித்து வரும் தமிழ்த்தரப்பு நிருவாக மேல்மட்டத்தால் உருவாக்கப்பட்டன. அப்போது கிழக்கில் காணப்பட்ட யுத்த சூழலும் சிவில் நிர்வாக முடங்குதலும், சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள், சமூகப் பிரமுகர்களின் அலட்சியமும், என மொத்தத்தில் கள்ளியங்காட்டு முஸ்லிம் கிராமத்தை தமிழர் கிராமமாகவும், அங்கிருந்த பள்ளிவாசலை ஹிந்து சமய நிலையமாகவும் அங்கிருந்த முஸ்லிம் பெயர் கொண்ட முஸ்லிம் பாடசாலையை தமிழ்ப்பெயர் கொண்ட பாடசாலையாகவும் மாற்ற உதவியிருக்கிறது.

கள்ளியங்காடு முஸ்லிம் கொலனியிலிருந்து வெளியேறிச் சென்று வேறு பிரதேசத்தில் தஞ்சமடைந்த பள்ளிவாசலின் அன்றைய தலைவர் அதே ஆண்டு மீண்டும் 2002 டிசெம்பெர் கைங்கரியத்தில் மும்முரமாகச் செயற்பட்டுள்ளார் என்று பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் குற்றம்சாட்டுகின்றனர். பள்ளிவாசலின் பின்னால் குடியிருக்கும் தமிழரான அரச உத்தியோகத்தர் ஒருவர் முதலில் பள்ளிவாசலின் காணியின் ஒரு பகுதியைத் தனது வாகனப் பாதையாக அத்துமீறி ஆக்கிரமித்துள்ளார். பின்னர் சிறிது சிறிதாக ஒட்டு மொத்த நில ஆக்கிரமிப்பும் நடந்திருக்கிறது. இந்தப் பின்னணியில், "எங்களது பள்ளிவாசல் வளவைத் துப்பரவு செய்து பராமரிப்பதற்கு அனுமதி தருமாறு கேட்டுக்கொள்கிறோம்". என்று ஒரு கடிதம் முஸ்லிம் கொலனி பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினால் கிராம சேவை உத்தியோகத்தரூடாக பிரதேச செயலாளருக்கு 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ம் திகதி கையளிக்கப்பட்டது.

"இவ்வளவில் பள்ளிவாசல் இருந்து வந்திருப்பது விசாரணையின்போது தெரிய வருகின்றது கடந்த ஜுன் 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்செயலின் காரணமாக பள்ளிவாசல் சேதமுற்றுள்ளது. தற்பொழுது இவ்வளவில் கட்டிடமோ வேலியோ இல்லை என்பதை தங்கள் கவனத்துக்கு அறியத் தருகிறேன். செலுத்திய ரசீதுகளும் சான்றாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் பள்ளிவாசல் அமைந்திருந்த பகுதியை மீண்டும் பெறும் முயற்சியில், பள்ளிவாசல் காணியில் அத்துமீறிக் குடியேறியவர்களை வெளியேற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து பள்ளிவாசல் முன்னர் அமைந்திருந்த காணியிலிருந்து அத்துமீறிய குடியேறிகள் அகற்றப்பட்டார்கள். என்றாலும், அது நடந்த பின்னர் அக்காணியில் பள்ளிவாசலுக்குப் பதிலாக மட்டக்களப்பு தமிழர் நிருவாக அதிகாரிகளின் ஒத்துழைப்போடு பிரம்மகுமாரி இராஜயோக நிலையம் கட்டப்பட்டது.

பிரதேசத்தில் மஸ்ஜிதுல் பிர்தௌஸ் என்ற பள்ளிவாசல் அமைத்திருந்த இடத்தில் பிரம்மகுமாரிகளின் இராஜயோக நிலையம் என்ற இந்து தியான ஆலயம் கட்டப்பட்டு பிரம்மகுமாரிகள் அமைப்பின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நிர்மலா கஜானி என்பவரால் கடந்த 09.11.2011 திகதி பிரம்மகுமாரி இராஜயோக நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யார் இந்த பிரம்மகுமாரிகள் ?

இராஜயோகம் என்பது நவீன இந்துமத தியான வழிபாட்டு முறையும் பயிற்சியும் நிலையம் ஈடுபட்டு வருகின்றது. வாழ்க்கையின் பெறுமானம் பற்றியும் சுய மேம்பாடு பற்றியும் தியான முறையுடனான பயிற்சிகள் இங்கு வழங்கப்படுகின்றன. அவ்வாறான நிகழ்ச்சியொன்று கொழும்புபில் நடைபெற்றபோது அந்த நிகழ்வில் கலந்து கொண்ட பிரம்மகுமாரி திருமணி சொன்ன வார்த்தை கள் "தவறான புரிந்துணர்வுகளால் துன்பங்களும் துயரங்களும் ஏற்படுகின்றன

உண்மையிலேயே அன்பானது தூ ய உணர்வுகளால் நிறைந்தது. அங்கு எதிர்பார்ப்புகளோ தன்னலமோ, சார்புகளோ, வரையறைகளோ இருக்க முடியாது. ஆகவே, அன்பானது குறைகளைப் பார்க்காது பொது நலம் கருதுகின்ற எல்லையற்ற தூ ய உணர்வுகளால் நிறைந்தது. அன்பை நாம் வழங்கும்போதுதான் அதிகரிக்கின்றது. இதனால் நாம் துன்பப்படவோ நம்மால் பிறர் துன்பப்படவோ மாட்டார்கள்."என்றார். அப்படியென்றால், அன்பைக் கொண்டு துன்பத்தையும் துயரத்தையும் களைந்து பொது நலம் பேணுவதாகும். இவ்வாறான அன்புப் போதனையைக் கொண்டு பிறருக்கு துயரம் நீக்க வேண்டிய ஒரு ஸ்தாபனம் கள்ளியங்காட்டில் வாழ்ந்த,



முஸ்லிம் மக்களின் இருப்புக்குச் சான்றாக உள்ள சகல ஆவணங்களும் அழிக்கப்பட்டன. எனினும், பின்னர் நில அளவை செய்து மையவாடியைச் சுற்றி மதில் கட்டியபோதும் இழக்கப்பட்ட சுமார் இருபது பேர்ச்சஸ் காணி அதனைச் சுற்றி அடாத்தாகக் குடியேறியிருந்த தமிழ் மக்களால் அபகரிக்கப்பட்டு விட்டது.

அபகரித்துக் கொண்டிருந்த அங்கிருந்த பள்ளிவாசல் காணியையும் மூன்றாகப் பிரித்து இரண்டு பகுதியை அப்குதியைச் சுற்றியிருந்த தமிழர் குடும்பங்கள் பகிர்ந்து கொண்டுள்ளனர். பள்ளிவாசலின் எஞ்சிய காணியில் ஒரு பகுதியில்தான் பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையம் கட்டப்பட்டுள்ளது. ஒரு பொது சொத்தான வக்பு சபையினால் பதிவு செய்யப்பட்ட இஸ்லாமிய சமய வழிபாட்டுத் தலமான பள்ளிவாசல் காணியை, சட்டத்திற்கெதிராக (முஸ்லிம் பள்ளிவாசல்கள் நம்பிக்கை பொறுப்புக்கள் அல்லது வக்ப் சொத்துக்கள் – வக்ப் என்பது நிரந்தரமாக சமய நோக்கத்தற்காக நம்பிக்கை வழங்கப்படும் சொத்துக்கள்) ஈடு வைத்தல், உரித்தாக்குதல், காணியின் உரிமையை மாற்றம் செய்தல், அல்லது விற்பனை செய்தல் என எந்த மாதம் 16ம் திகதி கள்ளியங்காடு முஸ்லிம் கொலனிக்குத் திரும்பி வந்தபோது அங்கு பள்ளிவாசல் சேதமாக்கப்பட்டு அங்கிருந்த உடைமைகள் சூறையாடப்பட்டிருந்ததை அவதானித்து மட்டக்களப்பு பொலிஸில் ஒரு முறைப்பாட்டை 2002 டிசெம்பெர் 17ம் திகதி பதிவு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டில் சேதங்கள், அழிவுகள் பற்றி மிக விரிவாக அவர் குறிப்பிட்டிருந்தார். இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக கள்ளியங்காடு பள்ளிவாசலை மீட்கும் பணியில் பல சமூக சிந்தனையாளர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இந்த ஈடுபாடும் அக்கறையும் ஊக்கமிழக்கப்படும் வகையில் பல செயற்பாடுகளை அங்கிருந்த தமிழர் தரப்பு அரச அதிகார நிர்வாகத்தை பயன்படுத்தி சிலர் திட்டமிட்டே செய்து வந்துள்ளனர்.

அந்த வகையில், அப்போது மண்முனை வடக்கு எனும் மட்டக்களப்பு நகர நிருவாகத்தின் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய கலாமதி பத்மராஜா எனும் பெண்ணே முஸ்லிம்களின் கள்ளியங்காடு கிராமத்தை தமிழர் கிராமமாக மாற்றும் மேலும், இவ்வளவை புனரமைப்பு செய்வதற்கு ஆவன செய்யலாமென சிபாரிசு செய்கிறேன்" என்பதாக அப்போது அப்பகுதிக்குப் பொறுப்பாக கடமையிலிருந்த கிராம சேவகர் எஸ். தங்கராஜா அறிக்கையிட்டுள்ளார். அந்த அறிக்கை மேலதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இந்த கிராம சேவகரின் விசாரணை அறிக்கையில் பள்ளிவாயல் இருந்த தடயமே அங்கு இல்லாமல் அழிக்கப்பட்டிருகிறது என்பது தெளிவாகிறது.

நில அளவையாளர் த. ராசரத்தினம் வரைந்த கள்ளியங்காடு கிராமத்தின் வரைபடம் பள்ளிவாசல் வீதியையும் பள்ளிவாசல் காணியையும் நன்கு அடையாளப்படுத்துகிறது. இவ்வரைபடம் 1985ஆம் ஆண்டு வரையப்பட்டுள்ளது. அங்கிருந்த பள்ளிவாசலில் மின்சார உபயோகத்திற்கான கட்டணங்கள் மட்டக்களப்பு கள்ளியங்காடு முஸ்லிம் கொலனி மஸ்ஜிதுல் பிர்தௌஸ் பெயரில் கட்டப்பட்டு வந்துள்ளன என்பது மட்டக்களப்பு மாநகர சபை பதிவுகளில் உள்ளன என்ற விடயங்களுடன், 1979ம் ஆண்டு தொடக்கம் 1987ம் ஆண்டு வரை மின்சாரக் கட்டணம் கொண்ட ஒரு ஆன்மீக இயக்கம். இது 1930ஆம் ஆண்டில் இந்தியாவில் உருவாகி உலகின் பல பாகங்களிலும் தனது கிளைகளை அமைத்து செயற்பட்டு வருகிறது. இலங்கையில் மாத்திரம் சுமார் இருபத்தெட்டு கிளைகளையும் பிரம்மகுமாரிகள் மத்திய நிலையம் ஒன்றையும் கொழும்பு தெஹிவளையில் அமைத்து செயற்பட்டு வருகிறது. பிரம்மகுமாரிகள் என்றால் "பிரம்மனின் புத்திரிகள்" (சிருஷ்டிக்குரிய கடவுள் பிரமன்) என்று அர்த்தத்தை கொண்டிருப்பினும் நடைமுறையில் இந்த இயக்க அங்கத்தவர்கள் ஆண் பெண் அனைவரும் பிரம்மகுமாரிகள் என்று அழைக்கப்படுவதும், அதிகளவில் பெண்களே இவ்வியக்கக் கிளைகளுக்கு தலைவியர்களாக இருப்பதும் நடைமுறையிலுள்ளது.

இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த, மற்றும் கைது செய்யப்பட்ட எல்ரீரீஈ இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களை மீண்டும் சமூகத்தில் இணைத்து அவர்களைச் சகஜ வாழ்க்கையில் ஈடுபடுத்தும் வகையில் நடத்தப்படும் மறுவாழ்வு பயிற்சி நடவடிக்கைகளில் ஒன்றாக பிரம்மகுமாரிகளின் கொழும்பு மத்திய வழிபடுகிற, அங்குள்ள முஸ்லிம் மைய வாடியில் அடக்கம் செய்யப்படுகிற மக்களுக்காக பிரார்த்தனை செய்யப் படுகிற ஒரு முஸ்லிம் வழிபாட்டுத் தலத்தை தகர்த்தெறிந்து, அதில் தனது நிறுவனத்தை "விரோதத்துடன்" அமைத்துள்ளது.

அன்பைப் போதிப்பது இப்படித்தானா? ஒரு சமூகத்தின் அடிப்படை மனித உரிமையை நிர்மூலமாக்கிவிட்டு அன்பை எப்படிப் போதிப்பது, சக வாழ்வை, சௌஜன்யத்தை எப்படி நடைமுறைப்படுத்துவது.? பிரம்ம குமாரிகள் சமூகங்களிடையே அன்பை நிலைநாட்ட தங்கள் பேரால் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் களைய ஆவன செய்வார் களா அந்த காணியை மீண்டும் பள்ளிக்கு வழங்குவார்களா? முடிந்தால் அந்தக் கட்டிடத்தையும் கூட அவர்களின் நல்லெண்ண அடையாளமாக மீண்டும் முஸ்லிம்களுக்கு வழங்கினால் அது இந்து மதத்தின் பெயரால் செய்த மத ஆக்கிரமிப்புக்குப் பரிகாரமாகக் கூட அமையலாம்.!

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர்.வரும் வாரமும் வரும்)










# சவூதிப் பெண்கள் பெண் வலுவூட்டல் செயல்பாடுகளும், தேசத்தின் வளர்ச்சியில் அவர்களது பங்களிப்பும்




சவூதி அரேபியா ஸ்தாபகர் மன்னர் அப்துல்அசீஸ் பின் அப்துல் ரஹ்மான் ஆல் ஸஊத் அவர்களின் காலத்திலிருந்து இரண்டு புனிதத் தளங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல்அசீஸ் ஆல் ஸஊத் அவர்களின் காலம் வரையில், சவூதிப் பெண்கள் நாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியில் ஒரு தீவிர பங்காளியாக மாறும் அளவுக்கு பல்வேறு வகையில் வலுவூட்டப்பட்டனர், மேலும் அவர்கள் அறிவியல், பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூகவியல் போன்ற பல்வேறு துறைகளில் மெச்சத்தக்க வெற்றிகளையும் அடைந்து வந்துள்ளனர்.

சவூதி அரேபியாவின் சட்டங்கள், இஸ்லாமிய ஷரீஆவிலிருந்து பெறப்பட்டவை. அச்சட்டங்கள் இருபாலாருக்குமிடையில் நீதியை நிலை நாட்டுவதை இலக்காகக் கொண்டு, இரு பாலினத்தின் பண்புகளையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கிடையிலான சமத்துவக் கொள்கையை ஏற்றுக்கொள்கின்றன. சவூதி அரேபிய இராச்சியம், பாலினங்களுக்கிடையிலான உறவின் ஒருங்கிணைப்பு மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் ஒரு சிறந்த வழியாகும் என்று நம்புகிறது. அவ்வாறே வேலை செய்யும் உரிமை, கல்வி, சுகாதாரம், பொருளாதார உரிமைகள் போன்ற மனித உரிமைகளின் பெரும்பாலான பகுதிகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே முழுமையான சமத்துவத்தைப் பேணுவதற்கும் இது சிறந்த வழியாகும். சமத்துவக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலும் மற்றும் அதை வலியுறுத்தும் வகையிலும், சவூதி மனித உரிமைகள் ஆணையம், தேவைகளுக்கு ஏற்ப தகவல்களைச் வழங்கும் உரிமையை பெண்கள் மற்றும் ஆண்களுக்கு வழங்குகிறது. பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக, இரு பாலினருக்கும் ஓய்வூதிய வயதை ஒருங்கிணைத்தல், ஊதியம், வகை மற்றும் பணித் துறை, மற்றும் வேலை நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் பாலின பாகுபாட்டைத் தடுப்பது, முன் அனுமதிகள் ஏதும் பெறாமல் பெண்கள் வணிகத்தில் ஈடுபட அனுமதித்தல் உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களை சவூதி அரேபிய இராச்சியம் ஏற்படுத்தியுள்ளது.

2001ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான ஐக்கிய நாடுகளின் சாசனத்தை சவூதி அரேபியாவின் இராச்சியம் அங்கீகரித்துக் கைச்சாத்திட்டது. அத்தோடு, தலைமை மற்றும் நிர்வாகப் பாத்திரங்கள் மூலம் திறம்பட பங்களிப்பதில் பெண்களின் முக்கிய வகிபாகம் காரணமாக தகுதிவாய்ந்த பெண்களை பல துறைகளில் உயர் பதவிகளில் அமர்த்துவதற்காக பல்வேறு சட்டங்களும் சீர்திருத்தங்களும் கடந்த ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஷூரா கவுன்சிலில் பெண்களுக்கு 20% ஆசனங்கள் ஒதுக்கி ஹிஜ்ரி 1434 ஆம் ஆண்டு அரச ஆணை வெளியிடப்பட்டது. மேலும் நகராட்சிகளின் இயக்குநர்கள் குழுவிற்கு பெண்களைத் தேர்வு செய்தல் மற்றும் பெண்களை அரச மற்றும் தனியார் துறைகளில் உயர் பதவிகளுக்கு நியமித்தல் போன்றவையும் இவ் ஆணையில் உள்ளக்கடக்கப்பட்டுள்ளது.

அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு வலுவூட்டுவதை உறுதி செய்வதற்காக சவூதி அரேபியா மேற்கொண்ட மிக முக்கியமான நடவடிக்கைகளில் சில பின்வருமாறு:

- பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலானா பாலின சமத்துவத்தை ஏற்படுத்துவதற்க்காக சட்டக் கட்டமைப்பில் பல்வேறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டது. குறிப்பாக பணி, பயண ஆவணங்கள், சிவில் சட்டம் , சமூக பாதுகாப்பு , போக்குவரத்து மற்றும் தனியார் சட்டம் போன்ற சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதைக் குறிப்பிடலாம். இவ்வாறு இவ் அனைத்துச் சட்டங்களும் பெண்களுக்கு வலுவூட்டுதாகவும் அவர்களின் சிவில் உரிமைகளைப் பாதுகாப்பதை உத்தரவாதம் அளிப்பதாகவும் அமைந்தன.
- “சவூதிப் பெண்களுக்கு வலுவூட்டும் முன்முயற்சியை” அரேபியாவின் பொதுப் பாதீட்டுக்குள் கொண்டுவந்தமை.
- பல்வேறு நவீன துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள உதவும் வகையில், சவூதிப் பெண்களை வலுவூட்டுவதற்க்காக கல்வித் துறைகளை விருத்தி செய்தமை.
- பெண்களின் அந்தஸ்த்தை மேம்படுத்துவதையும் சமூக, பொருளாதார மற்றும் அறிவியல் ரீதியில் அவர்களை உயர்வடையச் செய்வதையும் நோக்கமாகக் கொண்ட கொள்கைகளை மறுபரிசீலனை செய்வதற்கும் கூட்டாண்மைகள், முன்முயற்சிகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதற்கும் குடும்ப விவகார கவுன்சிலில் பெண்கள் குழுவை நிறுவியமை.
- மனித உரிமைகள் ஆணையம் அதன் குழுக்களில் பெண்களுக்கான ஒரு விஷேட குழுவை நியமித்துள்ளது, இது அனைத்துத் துறைகளிலும் சர்வதேச தரத்திற்கு ஏற்ப பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் அக்கறை கொண்டுள்ளது.
- பாலின சமநிலை மையம் நிறுவியமை.

பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரியுமான இளவரசர் முகமது பின் சல்மான் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ”சவூதி விஷன் 2030”, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பெண்களுக்கு தேவையான முயற்சிகளுக்கும் அவர்களை அனைத்து மட்டங்களிலும் செல்வாக்கு மிக்க கூறுகளாக உயர்த்தி காட்டுவதற்கும் உயரிய இடத்தை வழங்குகிறது. சவூதி அரேபிய இராச்சியம் கண்டு வரும் வளர்ச்சி இயக்கத்தின் ஒரு பகுதியாக பெண்களின் செயல்திறனை உயர்த்துவதற்கும் தொழிலாளர் சந்தையில் அவர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்குமாக இவ் விஷனில் ஒரு சுயாதீனமான மூலோபாய இலக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலைப்பாட்டில் இருந்து, சமூகத்தில் அவர்களின் அந்தஸ்த்தை மேம்படுத்தும் பல தீர்மானங்கள், சட்டம் மற்றும் ஒழுங்குகல் வெளியிடப்பட்டதன் மூலம் சவூதிப் பெண்களின் வலுவூட்டல் செயல்பாடு துரிதப்படுத்தப்பட்டுள்ளன. ”விஷன் 2030” ஆனது தொழிலாளர் சந்தையில் சவூதிப் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்துள்ளது. அவர்களின் பங்கேற்பு விகிதம் 36% ஐ எட்டியுள்ளது. இது 5 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இந்த சதவீதம் இரண்டு மடங்கு அதிகமாகும். இராச்சியத்தில் பெண்களுக்கான தொழிலாளர் கணக்கெடுப்பின் முக்கிய குறிகாட்டிகளின்படி, வேலையின்மை விகிதம் முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது.

சவூதி புள்ளியியல் ஆணையம் 2023ஆம் ஆண்டு டிசம்பரில் தனியார் துறையில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் 945,691 சவூதி பெண்கள் மற்றும் 334,984 குடியிருப்பாளர்கள் உட்பட 1,280,675 பெண் பணியாளர்கள் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் தனியார் துறையில் 44,769 குடிமக்கள் முதல் முறையாக பணியில் சேர்ந்துள்ளனர். இது தனியார் துறையில் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையை 10,975,830 அதிகரிக்கச்செய்துள்ளதாக இவ் அறிக்கை மதிப்பாய்வு செய்துள்ளது. சவூதி தொழில் சந்தை அறிக்கையின் படி, தனியார் துறையில் பணிபுரியும் மொத்த குடிமக்கள் தொகை 2.3 மில்லியன்களாகும். இதில் ஆண்கள் 59.2மூ உம் பெண்கள் 40.8% ஆகும். தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்களிப்பு விகிதம் 2017 இல் 17% ஆக இருந்தது. அது 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 35.3% ஆக உயர்ந்து இரட்டிப்பாகியுள்ளது, மேலும் பெண்கள் தலைமைப் பதவிகளிலும், சுற்றுலா மற்றும் பொழுதுபோக்குத் துறை போன்ற பல புதிய துறைகளிலும் பணிக்கமர்த்தப்பட்டு வலுவூட்டப்படுகிறார்கள். புள்ளிவிவரங்களுக்கான பொது ஆணையத்தால் வெளியிடப்பட்ட சவூதி பெண்கள் 2022ஆம் ஆண்டு அறிக்கை, மற்ற வயதினரை விட இளம் வயதுப் பெண்களே அதிக எண்ணிக்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் எனக் குறிப்பிடுகிறது. அதாவது (15 - 19) வயதுக்குட்பட்ட பெண் ஊழியர்களின் எண்ணிக்கை 916,439 ஐயும், (20 - 24) வயதுக்குட்பட்ட பெண் ஊழியர்களின் எண்ணிக்கை 850,780 ஐயும் எட்டியுள்ளது. என இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்தார்.










நாச்சியாதீவு பர்வீன்

# வானலையில் ஒரு வழிப்போக்கன்

– அகரன் பூமிநேசன்–

'பெருக்கத்து வேண்டும் பணிதல்' என்ற அந்த 'தொல்' வரிக்கு இலக்கணமான புத்தகம் இது.

B.Hஅப்துல் ஹமீத் தன் வாழ்வனுபவ துளிகள் இங்கே சிந்தியுள்ளது.

படிக்க ஆரம்பித்ததும் அதிர்ச்சி, பிரமிப்பு. பல நாவல்கள் எழுதத்தக்க சம்பவங்களும், யாரும் அறியாத செய்திகளும் கொட்டிய புத்தகம்.

நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது பாட்டுக்கு பாட்டு நிகழ்ச்சியை வகுப்பறையில் நடாத்துவேன். அடித்தொண்டையால் எவ்வளவு கத்தியும் அந்த இனிய தேன்குரலை என் தொண்டை தரவே இல்லை.

தன் வாழ்நாளில் அரை நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக தன் குரலை தமிழின் இனிமைக்கு தந்துகொண்டிருக்கிற குரல்.

உணவு சமைத்து விற்று பிள்ளைகளை காத்த தாயின் வீட்டில் இருந்து உருவானது கிடைத்தற்கரிய 'தமிழின் இனிய குரல்' என்று அறியும்போது வாசிப்பவர் எவரையும் அசைக்கும்.

அதிகாலை ஐந்தரை மணிக்கு வானொலி நிகழ்ச்சி. பேரூந்தில் சென்றபோது அடை மழை. வீதியில் பெருவெள்ளம். பேரூந்து நகரவில்லை. நேரம் நெருங்கி விட்டது . பேரூந்தில் இருந்து இறங்கி நடந்தால் நெஞ்சு வரை நீர். கழிவு வாய்க்காலும் கலந்த நீரால் உடலெல்லாம் அழுக்கு தோய்ந்து மணம்.

நெஞ்சு புடைக்க ஓடிச்சென்று நிகழ்ச்சியை குறித்த நேரத்தில் செய்கிறார். கலையகமே நாற்றமடிக்கிறது. பாடலை ஒலிபெருக்கிவிட்டு அந்த இடைவெளியில் உடலை கழுவிக்... கழுவி அந்த நிகழ்ச்சியை நடத்துகிறார். தொழில் நுட்ப உதவியாளர் மூக்கை பொத்தியபடி வேலை செய்கிறார்.

இந்தக்காட்சியே தன் தொழிலுக்கு அவர் கொடுத்த உச்ச நிலையையும், உலகத்தமிழரிடையே உயர்ந்திருப்பதற்கும் சான்று.

இங்கிலாந்தில் வானொலி ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளில் இலங்கையில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது (1925) என்பது எவ்வளவு பெருமை.

இலங்கை ஒலிபரப்பு வரலாறும், தன் மூத்தோர்கள் பற்றிய விபரங்களையும் தனிக்கட்டுரையாக எழுதி உள்ளமை அவரின் உயர்ந்த உள்ளத்தின் பதிவுகள்.


இலங்கையில் வானொலியை உருவாக்க இலங்கை வானொலியின் தந்தை என்று அழைக்கப்பட்ட நுனறயசன உயசிநச முயற்சி செய்கிறார்.

முதலாம் உலகப் போரில் பழுதடைந்து கரை ஒதுங்கிய ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்த சமிக்ஞை கருவிகளைக் கொண்டு அந்த ஒலிபரப்பு கருவியை உருவாக்க மூன்று பொறியியலாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

ஜ.நடராசா, W.E. sillva, ட. ஜெயதிலக. இக்குழுவுக்கு தலைமை தாங்கிய ஜ.நடராசாவின் உழைப்பாலும், ஆர்வத்தாலும் இது சாத்தியமானது.

ஆனால் அவர் பெயர் வரலாற்றில் மறைக்கப்பட்டுவிட்டது. அதுமட்டுமல்ல ஜ. நடராசா அவர்களின் குடும்பத்தாலேயே அவர் கைவிடப்பட்ட அனாதை நிலைக்கு ஆளானார் என்ற செய்தி திரு அப்துல் ஹமீத் அவர்களின் தேடுதலால் இப் புத்தகத்தில் வெளியாகி இருக்கிறது.

ஜ. நடராசாவின் ஆர்வத்தை அவதானித்த நுனறயசன அவரை இத்துறையில் மேலும் பயிற்சி பெற இங்கிலாந்து அனுப்புகிறார்.




மார்க்கோனி வாழ்ந்த காலத்திலேயே இங்கிலாந்து சென்றவர் இலங்கை திரும்ப இருந்த காலத்தில் நோயுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார்.

அங்கு அவரை அன்போடு பராமரித்த இங்கிலாந்து பெண்ணான Christina Parkinson வை திருமணம் செய்து ஊர் திரும்பியபோது,

அவரது தந்தை ஒரு 'வெள்ளைக்காரியை திருமணம் செய்ததால்' தன் குடும்பத்தை விட்டே விலக்கிவிட்டார்.

இதனால் நீண்டகாலம் கொழும்பில் ஒரு விடுதியில் தங்கி தம்பதிகள் வாழ்ந்திருக்கிறார்கள்.

இலங்கை ஒலிபரப்பில் பாரிய மாற்றங்களை தொழில்நுட்ப ரீதியாக அவர் மேற்கொண்டு இருக்கிறார். அவர் மனைவியும் இலங்கை வானொலி ஆங்கில சேவையில் பணியாற்றி இருக்கிறார். இதனால் தான் எவரெஸ்ட்டில் முதலில் கால்பதித்தவர்களின் காதில் ஒலித்தது இலங்கை வானொலி.

இவற்றுக்கு காரணமான ஜ. நடராசா குடும்பத்தின் நினைவில் இருந்தும் இலங்கையின் வானொலி வரலாற்றிலும் ஒரு பதிவும் இல்லாமல் போனது எத்தனை கொடுமை?.

பெருமைக்குரிய முன்னோடிகள் என்று அவர் எழுதி இருக்கிற ஒவ்வொருவரின் ஆழுமையும் புதிய தலைமுறை படித்தறிய வேண்டியவை.

இனஅழிப்பு ஏற்பட ஆரம்பித்த போது அவர்களில் அதிகமானோர் நாட்டை விட்டே சென்னைக்கும், அமெரிக்காவுக்கும், இங்கிலாந்தென்றும் சென்றது இலங்கை தன் உன்னதங்களை தானே கலைத்த கதை.

தமிழ் மொழியின் அவசியம்பற்றிய கட்டுரை ஒவ்வொரு வீட்டிலும் படிக்க வேண்டிய தேவாரம்.

எங்கள் காதுகளில் இனிமையை விதைத்த திரு அப்துல் ஹமீத் அவர்களின் எழுத்தோடு பேசியது ஏக்கத்தையே தருகிறது.

இந்த நொடியிலும் உலகில் எங்கோ ஒரு மூலையில் ஒரு மேடையில் அடித்தொண்டையால் ஒருவர் கத்தியபடியே இருப்பார்.

அவர் முயற்சி செய்வது தன்னுடைய தொண்டையில் இனிய அப்துல் ஹமீத் அவர்களின் குரலை வர வைப்பதன் முயற்சிதான்.

## செதுக்க முடியாத சிற்பம்

*சிந்தனை*
*இல்லாத மனிதன்*
*செதுக்கவே முடியாத*
*ஒரு சிற்பம்...*

*உறுமும் புலி !*
*சீறும் நாகம் !*
*எரிக்கும் நெருப்பு !*
*வெடிக்கும் வேட்டு !*
*இவை அல்ல ஆபத்து !*

*உள்ளொன்று ஒளித்து*
*வெளி ஒன்று*
*எடுத்துக் கூறும்*
*நய வஞ்சகரின் நாக்கு !!...*

**பொன்மனச்செம்மல்**
**கவிஞர் தாஜ்மஹான்**

## வருத்துவது

நெல் வயலுக்குள்ளே
நெருங்கி வளர்ந்திருந்த
புல் பிடுங்கி விட்டுப்
போகின்ற பெண்ணாளின்
கன்னத்தில் வெள்ளிக்
காசுகள் போல் தேமல்
என்னுள் ஒரு வேதனையை
ஏன் எழுக என்றதுவோ

மருந்தொன்று அறிவேன் அம்
மறு நீங்கச் செய்திடலாம்
அறிந்ததனைச் சொல்லி விட
ஆவல் மிகக் கொள்ளுகிறேன்

மெல்ல வழியில் இறங்கி
மெதுவாகச் சொல்லுகையில்
கொல் லென்று சிரித்தாள் பின்
குளுமையுடன் தலை நிமிர்ந்து
"வருத்துவது எங்களது
வயிறே, முகத்தேமல்
உறுத்தவில்லை காக்கா" என
ஒரு பதிலைச் சொல்லி விட்டாள்!

**பாவலர்**
**பஸீல் காரியப்பர்**

CAREEM LANKA TRAVELS & TOURS (PVT) LTD

Hajj Pilgrimage 2024 | 1445 Hijri

"The Golden opportunity for the Hajj Pilgrimage 2024"
We offer exceptional service packages to all our valuable clients.

SILVER
(With Aziziya)
Duration
22 Days Package
Clock Tower & Star Class Hotel in With Aziziya
(B) Grade Tent in Mina
Meals Buffet/AC Tent
2.2 million

GOLD
(Full Makkah)
Duration
20 Days Package
Star Class Hotel in Makkah (500m)
Hajj Before 8 Days | After 2 Days
Madinah (50m) - 4 Days
(B) Grade Tent in Mina
Meals Buffet/AC Tent
2.5 million

PLATINUM
(Full Clock Tower)
Duration
20 Days or 12 Days Package
Clock Tower Hotel in Makkah
4* Star in Madina
(B) Grade Tent in Mina
Meals Buffet/AC Tent
3.5 million

Optional :
Customized Packages Include Gold and Platinum Tiers. For instance | Accommodations offering Kaaba View (based on request) | Separate Rooms | 5-star hotels with full board (FB) or half board (HB) meals | Individual ground transportation via luxury vehicles (round trip) | A grade tents in Mina | Air Tickets available in Business Class | and more, all customizable based on your requests.

FOR REGISTRATION & MORE DETAILS

MR. CAREEM | 07777 3 4444
MR. ASKER ALI | 07777 88 475
MR. ABDUL RAHMAN MOULAVI - 0764880365
HEAD OFFICE : #95, CHATHAM STREET, COLOMBO - 01, SRI LANKA.
www.careemlanka.lk

MR. KAMALDEEN | 077 30 20 185
OFFICE | 011 4 38 51 50
MR. MUKSHITH MOULAVI | 0773575742
MR. SUKURDEEN MOULAVI | 0776022133
BRANCH OFFICE # 89, MALIGAKANDHA RD, MARADANA, COLOMBO - 10, SRI LANKA.
www.careemlanka.lk

MR. LAREEF MOULAVI | 077 676 3 222
OFFICE | 011 4 262 160
BRANCH OFFICE #205, 1/1 MAIN STREET, MATALE, SRI LANKA.
www.careemlanka.lk

DOCUMENTS NEEDED
PASSPORT
4 PASSPORT SIZE PHOTOS
MRCA REGISTRATION NUMBER

IATA Accredited Agent

## மனநலமும் ஆலோசனையும் 23

# உணவு இறைவனின் அருள்

மனிதனுக்கு உணவு எவ்வளவு அத்தியவசியமோ அதை முறையாக பயன்படுத்துவது அதைவிட அத்தியவசியமானது. உணவை வீணாகாமல் பயன்படுத்துவது எல்லாவற்றையும் விட முக்கியமானது.

இப்போதெல்லாம் காலநிலை மாற்றம் காரணமாக உணவு உற்பத்திக்கு பல அச்சுறுத்தல்கள் ஏற்பட ஆரம்பித்துவிட்டன. வரட்சி, கடும் மழை இப்படி பல காலநிலை மாற்றங்களால் உணவு உற்பத்தியில் பாதகமான மாற்றங்கள் நிகழ்ந்து வருக்கின்றன. இதற்கிடையில் தற்கால பொருளாதார நெருக்கடி நிலை, விலையேற்றம் என்பவற்றால் தேவையான உணவுகளை வாங்க முடியாமல் பலர் சிரமப்படுகின்றனர்.

உலகில் போதிய உணவு இல்லாமல் அண்ணளவாக 795 மில்லியன் மக்கள் வாழ்வதாக நாம் கேள்விப்படுகிறோம்.

போதிய உணவின்றி வாழும் இவ்வளவு பெரிய மக்கள் தொகையில் நானும் நீங்களும் இல்லாமல் இருப்பது இறைவன் எமக்குத் தந்த பாக்கியமாக நாம் கருதவேண்டும். பட்டினியில் இருக்காமல் நேரத்திற்கு நேரம் அழகான உணவு கிடைப்பது என்பது எவ்வளவு பெரிய அருள் என்பதை ஒவ்வொரு உணவு வேலைகளிலும் நாம் சிந்திக்க மறந்துவிடக் கூடாது.

இன்றைய உலகில் எடை குறைவான பிள்ளைகள் 100 மில்லியன் வரை வாழ்கிறார்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எமது நாடு உட்பட வளர்ந்து வரும் நாடுகளில் ஆறில் ஒரு குழந்தை போசாக்கு குறைபாட்டால் எடை குறைவுடன் வாழ்வதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதில் எமது குழந்தைகள் ஆகக்கூடாது என்ற எண்ணமே எங்கள் ஒவ்வொருவரின் உள்ளத்தில் உருவாகச் செய்யும்.

நாம் உணவு உட்கொள்ளும் நேரங்களில் குறைந்த பட்சம் ஒரு நேரத்திலாவது 'உலகில் மில்லியன் கணக்கான மக்கள் போதிய உணவின்றி உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார்களே' என்ற உணர்வை வரவழைத்துக் கொண்ட மனித நேயமுள்ள நல்ல மனிதராக நாம் மாறினால் அதுவே உணவு வீணாகாமல் தவிர்ப்பதற்கான, ஆடம்பர உணவுகளை குறைப்பதற்கான உணர்வு பூர்வமான ஒரு முறையாக அமைந்துவிடும்.

உணவு உள உடல் ஆரோக்கியத்திலும் சமூக ஆரோக்கியத்திலும் உறவு பேணுவதிலும் மிகப்பெரும் செல்வாக்குச் செலுத்தும் இறைவனால் அருளப்பட்ட அழகான பரிசாகும். நாம் ஒவ்வொருவரும் உயிர் வாழ்வதற்கான திறவுகோளாக இருப்பதும் உணவாகும்.

நாம் உணவுக்கு மதிப்பளிக்கக் கூடியவர்களாக இருந்தால், உணவை அருள் பரிசாக ஏற்றுக் கொண்டவர்களாக இருந்தால் அதை ஒரு போதும் அதிக ஆடம்பரமாக உண்ணவோ, வீணாக்கவோ இடமளிக்கவே மாட்டோம்.

அதேவேளை ஒரு சிலர் நோன்பு திறக்கும் நேரத்தில் ஆடம்பர உணவுகளை தயாரித்து அவற்றை மற்றவர்கள் பார்க்க ஏதோ விதங்களில் சமூக வலையமைப்புகள் மூலம் காட்சிப் படுத்த முயற்ச்சிப்பதையும் சிலசமயங்களில் காண்கிறோம். இது உணவின்றி இருப்பவர்களுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தும். இந்த குற்றத்திற்கு நாம் எவரும் ஆளாகக் கூடாது.

இந்த இருக்கமான பொருளாதார நிலமையில் உணவுத் தேவை உள்ளவர்களுக்கு கொடுத்து உதவுவோம்.

நாமும் உணவு வீணாகாமல் உண்ண பழகிக்கொள்வோம்.

சிக்கனத்தின் தேவையையும் அதனால் கிடைக்கும் பயன்களையும் எமது பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டுவோம்.

பசியின் விளைவுகள் நீண்ட கால பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பது எமக்குத் தெரியும்.

எந்த வயதினரும் உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள சத்தான உணவு அவசியம் என்பதையும் நாம் அனைவரும் அறிவோம்.

உண்ண போதியளவு உணவு எதுவும் இல்லாத போது அல்லது குறைந்த ஊட்டச்சத்து உள்ளடங்கிய மிகக் குறைந்த உணவை உட்கொள்வது ஒருவரின் ஆரோக்கியத்தை கணிசமாக பாதிக்கும் என்பதும் எமக்குத் தெரியும்.

எனவே இந்த புனிதமான ரமழானில் ஆரோக்கியமான உணவுகளை நாம் அனுபவிக்கும் போது தேவையோடு இருப்பவர்களை கண்டறிந்து அவர்களும் ஆரோக்கியமான சமூகத்தின் அங்கத்தினர்களாக இருக்க எம்மால் முடியும் வழங்கி உதவுவோம்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

# இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண தொழிற்துறையில் உள்ளவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அவதானம்



இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதன் மூலம் அத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

வரிக் கொள்கையில் தற்போதைக்கு மாற்றத்தை ஏற்படுத்த முடியாது எனவும், ஆனால் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலை வலுப்படுத்துவதற்கு பொருத்தமான முறைமையொன்று தயாரிக்கப்படும் எனவும் தெரிவித்த ஜனாதிபதி, அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முன்மொழிவுகளைத் தயாரித்து இரண்டு வாரங்களுக்குள் வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுடன் (15)ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைகள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலைப் பாதித்துள்ள பிரச்சினைகள் மற்றும் தொழில் தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

இலங்கையில் இரத்தினக்கல் தொழிற்துறை தொடர்பான ஏற்றுமதிகளை அதிகரிப்பதுடன் பெறுமதி சேர்ப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் சப்ரகமுவ மாகாணம் மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் சுரங்கத் தொழில்களை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அதற்கமைவாக இலங்கையின் இரத்தினக்கல் வர்த்தகர்களுக்கு அந்தப் பகுதிகளில் சுரங்கத் தொழில்களை ஆரம்பிப்பதற்கான பூரண வாய்ப்பு கிடைக்கும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலும் இரத்தினக்கல் மற்றும் சுரங்கத் தொழில்களை ஆரம்பிக்க முடியுமா என்பது தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்காவிட்டால் இவ்வாறான விடயங்களை பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. மக்களின் உயிர்கள் கூட பாரிய ஆபத்தில் இருந்த வேளையில் நாட்டின் பொறுப்பை ஏற்ற ஜனாதிபதி இன்று நாட்டில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றம் குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச். எஸ். சமரதுங்க மற்றும் துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.




பயாஸா பாஸில்



# தொழுகையை சீராக்குவோம்

அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்த அல்லாஹ் ஏனைய படைப்பினங்களைப் போல் அல்லாது மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் மனிதனை வைத்துள்ளான். பிரதிநிதி என்ற அமைப்பில் அந்தஸ்தையும் வழங்கியுள்ளான். அல்ஹம்துலில்லாஹ்...!!

முழு பிரபஞ்சம் அண்டசராசரங்களை படைத்த என் வல்லவன் ரப்புல் ஆலமீனுடன் எம்மால் கதைக்க முடியும். கவலை கஷ்டங்களை சொல்லி அழ முடியும். சந்தோஷ தருணங்களுக்காய் மகிழ்ச்சி கொண்டாட முடியும். அதற்கான ஏற்பாடாக அல்லாஹ் எமக்கு அன்பளிப்பாக தொழுகையை ஆக்கியுள்ளான். ஒவ்வொரு தொழுகையிலும் ஒவ்வொரு சிறப்பை வைத்து இருக்கின்றான்.

ஐவேளை தொழுகை மாத்திரமல்ல சுன்னத்தான மற்றும் நபிலான தொழுகைகளிலும் அதிகம் அதிகம் நன்மைகளை ஏற்படுத்தி வைத்துள்ளான்

**வித்ர்**

ஐவேளைத் தொழுகைகளில் ஏற்படும் தவறுகளை திருத்தி சீரமைத்துக் கொள்ளக்கூடிய தொழுகையாக இது அமைந்திருக்கின்றது.

**தஹஜ்ஜத்**

அல்லாஹ்விடம் கேட்கக்கூடிய சிறந்த தருணம். எமக்கு தேவையான அனைத்தையும் அல்லாஹ் தர காத்திருக்கின்றான். என ஹதீஸ் கூறுகிறது. அல்லாஹ் தன் அடியார்களுக்கு வழங்குவதற்காக காத்திருப்பான் என ஹதீஸ் கூறுகிறது.

**முஹா**

அல்லாஹ் நமக்கு வழங்கியிருக்கக் கூடிய அருட்கொடைகளை நினைத்து நன்றி செலுத்தக்கூடிய தொழுகையாக இது அமைந்திருக்கின்றது.

" திருட்டுக்களில் மிக மோசமானது தொழுகையை திருடுவதாகும். என கண்மணி நாயகம் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

**தொழுகையை பேணித் தொழுவோருக்கு....**

- நிச்சயம் வெற்றி கிடைக்கும்.
- உணவு நெருக்கடி நீங்கும்.
- கப்ருடைய வேதனையை நீங்கும்.
- மறுமையில் வலது கையில் பட்டோலை கிடைக்கப்பெறும்.
- சிராத்துல் முஸ்தகீம் பாலத்தை மின்னல் வேகத்தில் கடக்க கூடியதாக இருக்கும்.
- விசாரணைகள் இன்றி சுவனம் செல்ல முடியுமாக இருக்கும்.

**தொழுகையைப் பேணித் தொல்லாதோருக்கு.....**

- இம்மையில் உலகில் பரக்கத் இல்லை.
- முகத்தில் ஸீனத் இல்லை.
- நற்செயலுக்குப் பிரதிபலன் இல்லை.
- துவா ஒப்புக்கொள்ளப் படமாட்டாது.
- நல்லடியார்களின் துவா கிடைக்கப்பெற மாட்டாது.

**மரண தருவாயில்....**

- இழிவான நிலையில் மரணம்.
- கடல் நீரை குடித்தாலும் தீராத தாகம்.
- பசியுடன் மரணம்
- கப்ரில் விலா எழும்பு ஒன்றோடு ஒன்று சேர்க்கப்படும்.
- கப்ரில் நெருப்பு எரிக்கப்படும்.
- அவன் மீது ஒரு பாம்பு சாட்டப்படும்.
- கப்ரின் வெளியே கடுமையான முறையில் விசாரணை இருக்கும்.
- அல்லாஹ்வின் கோபம் அவன் மீது உண்டாகும்.
- நரகத்தில் தள்ளப்படுவான்.

எனவே., இந்த ரமழானில் எம்மை சீர்படுத்தி எம் தொழுகைகளையும் சீர்படுத்தி நல்லடியார்கள் கூட்டத்தில் இணைந்து கொள்ள முயற்சிப்போம்..



# ஒரேஞ்

விட்டமின் சி ஒரு முகப்படுத்தப்பட்டு சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இப்பழத்தில் இன்டர்பெரான் என்ற இரசாயனத் தூதுவர்களை அதிகம் உற்பத்தி செய்வது விட்டமின் சி. காற்று மற்றும் நீர் மூலம் பரவும் நோய்த் தொற்றுக் கிருமிகளை இந்த இன்டர்பெரான்கள் எதிர்த்துப் போராடி உடலில் உடலில் அவை சேராமல் அழிக்கின்றன. ஓரேஞ்ச் கிடைக்காத போது எலுமிச்சம் பழச்சாறு அருந்தலாம்.

# கடலுணவு

இறால் , மீன் மற்றும் நண்டு அழிந்து போன செல்களால் நோயும் , நோய்த் தொற்றும் ஏற்படாமல் தடுப்பதில் இவற்றில் உள்ள துத்த நாக உப்பு உதவுகிறது.



எனவே வாரம் ஒரு நாள் இவற்றில் ஒன்றைச் சேர்த்து சாப்பிட்டு வரவும்.



அரபாத் பஹர்தீன்

# ஐ.சி.சி.யினால் STOP CLOCK என்ற முறை அமுல்படுத்தப்பட்டது










(அரபாத் பஹர்தீன்)

சர்வதேச கிரிக்கெட் பேரவை சோதனை முறையில் ஆரம்பித்திருந்த நிறுத்து கடிகார விதிமுறையை எதிர்வரும் ஜ/ன் மாதம் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் இடம்பெறவுள்ள ரி20 உலகக்கிண்ணத் தொடரிலிருந்து அமுல்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இந்த விதிமுறையை சர்வதேச கிரிக்கெட் பேரவையால் அறிமுகப்படுத்தப்பட்டு சோதனை நடவடிக்கையாக சிலபோட்டிகளின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில் டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐசிசி சந்திப்பின்போது இந்த விதிமுறை நிரந்தரமாக அமுல்படுத்தப்படும் என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளில் இந்த விதிமுறை நடைமுறைப் படுத்தப்படும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித் துள்ளது.அத்துடன் இந்த எதிர்வரும் ஜீன் மாதம் முதலாம் திகதி மே.தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ள 9ஆவது ரி20 உலகக் கிண்ணத் தொடரில் இந்த விதிமுறை நடைமுறையாகவுள்ளது.

நிறுத்து கடிகாரத்தின் விதிமுறையை பொருத்தவரை ஒரு ஓவர் நிறைவின் போது நிறுத்து கடிகாரம் ஆரம்பிக்கப்பட்டு அடுத்த ஓவர் ஆரம்பிக்கும் போது கடிகாரம் நிறுத்தப்படும். பந்துவீசும் அணியானது ஓவர்களுக்கு இடையில் 60 செக்கன்களை மாத்திரமே எடுத்துக்கொள்ள முடியும்.

குறித்த இந்த நேரத்திற்குள் பந்துவீச தவறும் பட்சத்தில் களத்தில் உள்ள நடுவர்கள் இரண்டு தடவைகள் பந்துவீசும் அணியை எச்சரிக்க முடியும். மூன்றாவது தடவையாக இந்த தவறு இடம்பெறும் பட்சத்தில் அச்சந்தர்ப்பத்தலி துடுப்பெடுத்தாடும் அணிக்கு 5 ஓட்டங்கள் நடுவர்களால் மேலதிகமாக வழங்கப்படும்.

நிறுத்த கடிகாரத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கள நடுவர்கள் மற்றும் மூன்றாவது நடுவருக்கு வழங்கப்படும் என்பதுடன், இது தொடர்பான இறுதி தீர்மானத்தை நடுவர்களால் எடுக்க முடியும். அதேநேரம் போட்டியின் போது ஆட்மிழப்புக்கான மேன்முறையீடு செய்யும் நேரம், துடுப்பாட்ட வீரரால் நேரம் தாமதமாக்கப்படுவது மற்றும் வேறு காரணங்களால் தாமதம் ஏற்படுமாயினும் அதற்கான முடிவினை எடுக்கும் போறுப்பும் நடுவர்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் இடம்பெறவுள்ள நட்பு ரீதியான உதைப்பந்தாட்டத் தொடர்




(அரபாத் பஹர்தீன்)

இலங்கை உட்பட 4 நாடுகள் பங்கேற்கின்ற நட்பு ரீதியான உதைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி கொழும்பு ரேஸ் ஹோஸ் மைதானத்தில் ஆரம்பமாவுள்ளதுடன் இலங்கை உதைப்பந்தாட்ட அணி முதல் போட்டியில் பபுவா நியூகீனியா அணியை சந்திக்கின்றது.

அண்மையில் கட்டாரில் இடம்பெற்ற ஆசியக் கிண்ண ஆரம்ப நிகழ்வில் பிபாவின் தலைவரான கியானி இன்பான்டினோ மற்றும் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரான ஜஸ்வர் உமர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்றிருந்தது. இதன் போது இத் தொடர் தொடர்பில் பேசப்பட்டு முடிவும் எட்டப்பட்டிருந்தது. அதற்கமைய இலங்கை இ மத்திய ஆபிரிக்காஇ பபுவாநியூகினியா மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் இத் தொடரில் பங்கேற்கின்றன.

அந்தவகையில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் போட்டி பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு ரேஸ் ஹோஸ் மைதானத்தில் மத்திய ஆபிரிக்க மற்றும் பூட்டான் அணிகளுக்கு இடையில் இடம்பெறவுள்ளது. பின்னர் அது தினம் இரவு 8.45 மணிக்கு இலங்கை அணி பபுவாநியூகினியா அணியை எதிர்கொள்கின்றது

அதனைத் தொடர்நது எதிர்வரும் 25ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு அதே மைதானத்தில் மத்திய ஆபிரிக்க அணி பபுவா நியூகினியா அணியை எதிர்த்தாடுகின்றது. அன்றை தினம் இரவு 8.45 மணிக்கு இலங்கை அணி பூட்டான் அணியை எதிர்த்துப் பலப்பரீட்சை நடாத்தவுள்ளது. இவ்வாறு போட்டித் தொடரின் அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

இத் தொடருக்காக இலங்கை உதைப்பந்தாட்ட அணி தொடராக 2 வாரங்கள் கொழும்பில் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் ஏற்கனவே தேசிய அணியில் உள்ள வீரர்களுடன் புதிய வீரர்களும் இப்பயிற்சி முகாமில் இடம்பெற்றுள்ளனர்.

வர்களுடன் வெளிநாட்டு உதைப்பந்தாட்ட லீக் தொடர்களில் பங்கேற்று வரும் இலங்கைப் பிரஜா உரிமையைப் பெற்ற வீரர்களும் இத் தொடருக்காக உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாரக்கள்ளி ரோ.க.த. மகா வித்தியாலயத்தின் சம்பியன் மகுடத்தை வென்றது சென் செபஸ்டியன் இல்லம்



(அரபாத் பஹர்தீன்)

கல்பிட்டி நாரக்கள்ளி ரோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளின் நடப்பாண்டில் சம்பியன் கிண்ணத்தை சென் செபஸ்டியன் இல்லம் கைப்பற்றியது.

புத்தளம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கல்பிட்டி கோட்டத்தின் அங்கம் பெற்றுள்ள நாரக்கள்ளி ரோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பித்திருந்தது. அதனடிப்படையில் ஆண் மற்றும் பெண் மாணவர்களுக்கான குழு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பின்னர் முதலாம் திகதியிலிருந்து தனி மற்றும் குழு சுவட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்று வந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்நிலையில் கடந்த 6 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு இல்ல விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகள் பாடசாலையின் அதிபர் ஜே.எஸ்.ஏ. அமல்ராஜ் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து இடம்பெற்றது. இந்நிகழ்வின் சிறப்பு அதீதியாக கல்பிட்டி கோட்டக் கல்விப் பணிமனையின் பணிப்பாளர் திருமதி தீப்தி பெர்ணான்டோ கலந்து சிறப்பித்திருந்தார். அத்துடன் கல்பிட்டி கோட்டக் கல்விப் பணிமனையின் ஆசிரிய ஆலோசகர்கள், ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள் என அதிகமானவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இப் பாடசாலையின் சென் செபஸ்டியன் மற்றும் சென் அந்தோனீஸ் என 2 இல்லங்கள் போட்டியிட்ட இவ் இல்ல விளையாட்டுப் போட்டியில் நடப்பாண்டில் சம்பியன் கிண்ணத்தினை 547.5 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட சென் செபஸ்டியன் இல்லம் தனதாக்கிக் கொண்டது. இரண்டாம் இடத்தினை 447.5 புள்ளிகளுடன் சென் அந்தோனீஸ் இல்லமும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அல் பத்ரியாவில் கமர் இல்லம் முதலிடம்







(ஹிஸாம் ராசிக்)

கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த 9ஆம் சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

அதிபர் எம்.ஏ.எம்.எம். அஸ்மிர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அனுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இஷாக் ரஹ்மான் அவர்களும், விஷேட அதிதியாக அல்மிமா சமூக சேவை நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ் ஷெய்க் எம்.ஏ.ஏ. நூருல்லா் (நளீமி) அவர்களும், கௌரவ அதிதியாக அஷ் ஷெய்க் எம்.டி.எம். தவ்ஸீர் (SLEAS) அவர்களும் இன்னும் பல விருந்தினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்வருடம் கமர் இல்லம் முதலிடத்தைப் பெற்று செம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டதுடன், இரண்டாம் இடத்தை நஜ்ம் இல்லமும், மூன்றாம் இடத்தை ஷம்ஸ் இல்லமும் பெற்றுக்கொண்டன. பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களால் மைதானம் நிரம்பி வழிந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.